பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 21 புதன்கிழமை 08.11.2023 கதிர் 361

# திருகோணமலை மீதும் கண் வைக்கிறது சீனா

## மன்னாரில் அந்நாட்டு தூதுவர் கருத்து

கொழும்பில் உள்ள சீனத் தூதுக் குழுவின் வடக்குக்கான பயணத்தின்போது வடக்கில் முதலிட சீன முதலீட்டாளர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள் என்று தெரிவித்திருந்த சீனத் தூதுவர் கீ சென் ஹொங், கிழக்கில் திருகோணமலை துறைமுகம் மீதும் சீனா அக்கறை கொண்டுள்ளதை வெளிப்படுத்தியுள்ளார்.

''கிழக்கு மாகாணத்தினை எடுத்துக்கொண்டால் திருகோணமலை ஒரு மூலோபாயக் கேந்திர நிலையமாகும். சீனா தனது இறக்குமதிகளைச் செய்வதற்கு அது ஏதுவாக அமைந்துள்ளது'' என்று இலங்கைக்கான சீனத்தூதுவர் கீசென்ஹொங் தெரிவித்தார்.

மன்னாருக்கு நேற்று வருகை தந்த அவர் வங்காலையில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்ற 50 பேருக்கு முதற்கட்டமாக உதவித் திட்டங்களை வழங்கும் நிகழ்வில் 2

# இது ரகசியம் அல்ல!

பொலிஸ் மா அதிபர் விவகாரம் தொடர்ந்தும் இழுபறியிலேயே தொடர்கின்றது. நான்காவது தடவையாகவும் தற்போதைய பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவிற்கு மூன்று வார கால பதவி நீடிப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. ஜனாதிபதியின் இந்த முடிவை அரசமைப்புச் சபையிடம் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிகிறது. இதற்கு முன்னர் மூன்றாவது தடவை விக்ரமரத்னவிற்கு பதவி நீடிப்பு வழங்கப்பட்டபோதே அதனை நிராகரித்திருந்தது அரசமைப்புச்சபை. அப்படிப் பதவி நீடிப்பு வழங்குவதை அனுமதிக்க அரசமைப்பில் இடமில்லை என்று தெரிவித்திருந்தது. ஆனால், அதனை ஏற்காமல் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பதவி நீடிப்பு வழங்கியிருந்தார் ரணில் விக்கிரமசிங்க. இப்போது மீண்டும் அரசமைப்புச் சபை நிராகரிக்கும் என்று தெரிந்தும் நான்காவது பதவி நீடிப்புக்கான பரிந்துரையையும் அரசமைப்புச் சபைக்கு அனுப்ப அவர் நடவடிக்கை எடுத்து வருகின்றார். அரசமைப்புச் சபை நாளை கூடவுள்ளது.

அப்படிப் புதிய ஒரு பொலிஸ் மா அதிபரைத் தெரிந்தெடுப்பதற்கு என்னதான் சிக்கல் ஜனாதிபதிக்கு? அடுத்த பொலிஸ் மா அதிபராக 2

# பெறுமதி சேர் வரிக்கு எதிரான மனுக்கள் நீதிமன்றால் தள்ளுபடி

பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டமூலத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை நீக்கிக் கொள்வதாக மனுதாரர்கள் அறிவித்துள்ளமைக்கு அமைவாக அவற்றை உயர்நீதிமன்றத்தின் தள்ளுபடி செய்வதாக அறிவித்துள்ளது.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை பிரதி சபாநாயகர் தலைமையில் தொடங்கியபோது, அரசமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட 'பெறுமதிசேர் வரி (திருத்தம்)' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தினை அறிவிக்கும்போதே அவர் 2

# அரச, தனியார் ஊழியர்களை பலப்படுத்தி பொருளாதாரத்தை முன்னேற்ற திட்டமாம்

## ஜனாதிபதி தொடக்கியுள்ளார் என்கிறார் வஜிர எம்.பி.

16 இலட்சம் அரச துறை ஊழியர்களையும் 80 இலட்சம் தனியார் துறை ஊழியர்களையும் பலப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான முறையான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தொடங்கியுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் திட்டத்தின் வெற்றியின் ஊடாக எதிர்காலத்தில் மின்சாரம், எரிவாயு மற்றும் எரிபொருளின் விலைகளை குறைத்து, மக்களுக்கு சிறந்த பொருளாதாரத்தை உருவாக்க முடியும் எனவும், இந்த வேலைத்திட்டத்தை சீர்குலைக்கும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்க வேண்டாம் என்று மக்களைக் கேட்டுக் கொள்வதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பதினாறு இலட்சம் பேருக்கும் அதிகமாக உள்ள அரச பொறிமுறையை வரவு செலவுத் திட்டத்துடன் பொருத்துவதில், வங்குரோத்தான நாட்டின் எதிர்கால இலக்குகளை எவ்வாறு அடைவது என்பதில் கவனம் செலுத்தப்படவேண்டும்.

குறிப்பாக 2019 ஆம் ஆண்டில் நமது ஆட்சி மாற்றப்பட்ட பிறகு பொருளாதார நெருக்கடி உருவாகியது. அக்காலத்தில் வரிக் கொள்கை மாற்றப்பட்டது. குறிப்பாக தனிநபர் 8

# அஸ்வெசுமவை முன்னகர்த்த பிரதேச செயலர்கள் இணக்கம்

## நிதி இராஜாங்க அமைச்சர் இப்படி அறிவிப்பு

அஸ்வெசும நலன்புரி வேலைத்திட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்ல பிரதேச செயலாளர்களின் சங்கம் இணக்கம் தெரிவித்திருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இலங்கை பிரதேச 8

# கடும் மழையால் இயல்பை நேற்று இழந்தது கொழும்பு

## இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு; வான்கதவுகளும் திறப்பு

பருவமழை காரணமாக இலங்கைத் தலைநகர் கொழும்பில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது. வீதிகள் வெள்ளக்காடாகின. மேல், மத்திய, சப்ரகமுவ, ஊவா, வடமேல் மாகாணங்களிலும், காலி மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 9

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை எதிர்த்த மனுக்கள் கைவிடப்பட்டன

## நாடாளுமன்றில் சட்ட வரைவு கையளிக்கப்படாததால்

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பதால் அதற்கு எதிராக தாக்கல்செய்யப்பட்டபத்து மனுக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு உயர்நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை பிரதி சபாநாயகர் தலைமையில் தொடங்கியபோது, பயங்கரவாத எதிர்ப்பு எனும் சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்கள் மீதான உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை அவர் சபையில் அறிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்பு எனும் சட்டமூலம் 2023 ஒக்டோபர் 03 ஆம் திகதி நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்வாங்கப்படவில்லை என்பதால், அரசமைப்பின் 121(3) ஆம் உறுப்புரையின் பிரகாரம், சட்டமூலத்தின் அரசமைப்புக்குட்பட்ட தன்மையை தீர்மானிப்பதற்கு 2

# ஊழல் கிரிக்கெட் நிர்வாகம் முடிவுக்கு வரவேண்டும்

## எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

நாட்டின் 220 இலட்சம் மக்களுடன் இணைந்த கிரிக்கெட் விளையாட்டின் தற்போதைய ஊழல், திறமையற்ற மற்றும் ஒழுங்கற்ற நிர்வாகம் முடிவுக்கு வந்து சாதகமான மாற்றம் எதிர்பார்க்கப்படுவதாகவும், நாட்டிற்கும் விளையாட்டுக்கும் அதிக நன்மை பயக்கும் வகையில் மாற்றத்தை உகந்ததாகவும் அறிவார்ந்த முறையில் மேற்கொள்ளவேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம், தற்போதைய இலங்கை கிரிக்கெட்டின் தலைவிதி தொடர்பில் விசேட கூற்றொன்றை விடுத்து கருத்துத் 8

# நுவரெலிய அஞ்சல் நிலைய கட்டடம் தாஜ் சமுத்திராவிற்கு

## அரசு தீர்மானம் என்கிறார் அமைச்சர் பந்துல

நுவரெலிய அஞ்சல் நிலையம் அமைந்துள்ள இடத்தை தாஜ் சமுத்திரா சுற்றுலா விடுதிக்கு வழங்குவதற்கு ஆளும் தரப்பு தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் அண்மையில் இடம்பெற்ற நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் நுவரெலியா அஞ்சல் அலுவலகம் தொடர்பில் கலந்துரையாடப்பட்ட நிலையில் நேற்றைய தினம் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அவ்விடம் குறித்து கேள்வி 2

# கடற்றொழிலாளர்களின் நலன்களுக்காகவே புதிய சட்டத் திருத்தங்கள் மன்றில் முன்வைப்பு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

கடற்றொழில் அமைச்சு என்ற வகையில் மேற்கொள்கின்ற சட்ட திருத்தங்கள் மற்றும் புதிய சட்ட வரைபுகள் யாவும் எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரங்கள் தொடர்பிலான நலன்களை அடிப்படையாகக் கொண்டவையாகவே இருக்கும் என்பதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் சில பிரிவுகளை மாற்றம்செய்வது தொடர்பிலான வரைபினை நேற்றையதினம் நாடாளுமன்றத்தில் முன்வைத்து உரையாற்றும் 2

# அமைச்சர் டக்ளஸ் - கஜேந்திரன் நாடாளுமன்றில் கடும் சர்ச்சை

கடற்றொழில் நீர்வாழ் உயிரினவளங்கள் திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனுக்கும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நாடாளுமன்றத்தில் நேற்று கடும் சர்ச்சை ஏற்பட்டது.

கடற்றொழில் நீர்வாழ் உயிரினவளங்கள் திருத்தச் சட்டமூலம் தொடர்பில் உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், கடற்றொழில் அமைச்சானது வடக்கு, கிழக்கில் எமது மீனவர்களை பாதிக்கும் வகையிலும், பலவீனப்படுத்தும் வகையிலும் செயற்பட்டு வருவதானது கவலைக்குரியதாகும் - என்றார்.

கடற்றொழில் அமைச்சர் தமிழராக இருக்கையில், 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வரவிருக்கும்தகுதிவாய்ந்தவர்களில் தேசபந்து தென்னக்கோன் முக்கியமானவர். அவரே அந்தப் பதவிக்குவரவேண்டும்என்றுபொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸும் விரும்புகின்றார். ஆனால், அவர் மீது மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. அரகலயவை அடக்கியது மற்றும் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியது என்று ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்கள் இருப்பதால் அவரை அந்தப் பதவிக்கு நியமிப்பதில் ஜனாதிபதிக்குத் தயக்கம் இருக்கின்றது.

இருப்பினும் பொது ஜன பெரமுன கட்சியினரும் ராஜபக்ஷக்களும் படைத்தரப்பினரும் தென்னக்கோன் பதவிக்கு வருவதையே விரும்புகின்றனர். இதுதான் இப்போது பிரச்சினை. சூழ்நிலைக் கைதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவால் இவர்களை எதிர்த்து வேறு ஒருவரை பதவியில் அமர்த்த முடியவில்லை. அப்படி அமர்த்தினால், கோட்டாபய ராஜபக்ஷவை கடைசிக் காலத்தில் படையினரும் பொலிஸாரும் ஆதரிக்காமல் கைவிட்டதைப் போன்றதொரு நிலை தனக்கும் ஏற்படக்கூடும் என்று ரணில் அஞ்சுகின்றார்.

நாடாளுமன்றத்தில் சொந்தக் கட்சியின் எந்தப் பலமுமற்று அதிகாரத்தில் அமர்ந்திருக்கும்போது படையினரையும் பகைத்துக் கொண்டால் அல்லது அவர்களின் ஆதரவற்ற நிலையை ஏற்படுத்திக்கொண்டால் கோட்டாபயவிற்கு நிகழ்ந்ததே தனக்கும் நடக்கும் என்பதே அவரது அச்சத்திற்குக் காரணம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. அதேநேரம் தென்னக்கோனைப் பதவியில் அமர்த்தினால் அது வெளியில் பொது அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை அமைப்புக்களின் கடும் கண்டனத்திற்கு வழிவகுக்கும். இது அவரது பெயரை இன்னும் களங்கப்படுத்தும். அடுத்தடுத்த தேர்தல்களில் அந்தப் பாதிப்பின் தாக்கம் மிகப் பெரியதாக இருக்கும்.

அதனால்தான் இரு தலைக் கொள்ளியுள் எறும்பாக ஒரு புதிய பொலிஸ் மா அதிபரை நியமிக்க முடியாமல் தவிக்கிறார் ஜனாதிபதி. வழக்கமான அவரது உத்தியைக் கையில் எடுத்து, காலம் தாழ்த்தி வருகின்றார். ஆனால், இந்த உத்தியால் சினம்கொண்டு படைத்தரப்பினரும் படைத்துறையில் உயர் பதவியில் இருப்பவர்களும் கோட்டாவைக்கைவிட்டதுபோன்றே எப்போது ரணிலுக்கு எதிராகத் திரும்பப் போகிறார்கள் என்பதைப் பொறுத்தேரணிலின் இந்த உத்திக்கு ஆயுள்.

அரசமைப்புச் சபையிடம் தனது அதிகாரப் பலத்தைக் காட்டுவது போன்று பெரமுனவிடமோ படைத்தரப்பினரிடமோ பலம் காட்ட முடியாத சூழ்நிலைக் கைதியே ரணில் என்பது பொலிஸ் மா அதிபர் விவகாரத்தில் மிகத் தெளிவாகத் தெரிகின்றது. ஒரு பொலிஸ் மா அதிபரையே நியமிப்பதற்கு முடியாத, அதிகாரமிருந்தும் அதை நடைமுறைப்படுத்த முடியாத ஒருவரிடமிருந்து தமிழர்களின் பிரச்சினைக்கு எமது தலைவர்கள் யாராவது தீர்வை எதிர்பார்த்து நிற்பார்களாயின் அது அவர்களின் கையாலாகத்தனமன்றி வேறில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சினோபெக் எரிபொருள் நிரப்பு நிலையமானது, தற்போது வடக்கு மாகாணத்தினை அடைந்துள்ளது. மன்னாரிலும் அது காணப்படுகின்றது. சினோபக் நிறுவனம் உலகில் இரண்டாவது இடத்தில் உள்ள எரிபொருள் விநியோக நிறுவனமாகும்.

சினோபெக் நிறுவமானது, அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தினை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இதற்காக அரசுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வரும் நிலையில் விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

அவ்வாறான உடன்பாடு எட்டப்படும்போது, சினோபெக் நிறுவனமானது, நான்கு முதல் ஐந்து பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வதற்கு ஏதுவான நிலைமைகள் தோன்றும். இதன்மூலம் பல தொழில்வாய்ப்புக்களை உருவாக்க முடியும் - என்றார்.

## பெறுமதி சேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதற்கமைய, மேற்படி சட்ட மூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை நீக்கிக் கொள்வதாக மனுதாரர்கள் வேண்டிய கோரிக்கைக்கு ஏற்ப மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன என உயர்நீதிமன்றத்தினால் சபா நாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் வடக்கு,கிழக்கில் இவ்வாறான நிலைமைகள் நீடிப்பது துரதிஷ்டவசமாகும் என்றும் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கீடு செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீங்கள் வழமைபோன்றே பொய்யான கருத்துக்களை முன்வைத்துக் கொண்டிருக்கின்றீர்கள். பொய்யான கருத்துக்களை முன்வைத்து இந்தச் சபையைப் பிழையாக வழிநடத்திக்கொண்டிருக்கின்றீர்கள். வடக்கு,கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டது. அதனைக் கூறுங்கள் பார்க்கலாம் என்றார்.

அதன்போது, எனது கருத்துக்களை தெரிவிப்பதற்கு இடமளித்தால்தான் பிரச்சினைகளை வெளிப்படுத்தமுடியும். கருத்துக்களை தெரிவிக்கவிடாது தடுத்தால் எவ்வாறு முழுமையான விடயத்தினையும் வெளிப்படுத்துவது என்று குறிப்பிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தொடர்ந்து உரையாற்றினார்.

நீங்கள் தமிழ் அமைச்சராக இருக்கின்றபோதும் போரால் அழிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் கடற்றொழிலை மேம்படுத்துவதற்காக எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. கடற்றொழில் சங்கங்கள் இருக்கத்தக்கதாக, அந்தச் சங்கங்களை பலவீனப்படுத்தி, உங்களுக்கு விருப்பமானவர்களை கடற்றொழில் சங்கங்களுக்குள் கொண்டு வந்து பாரம்பரிய கடற்றொழிலை அழிக்கும் விதமாகவே செயற்படுகின்றீர்கள். இதனால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார். தற்போது கொண்டுவருகின்ற சட்ட திருத்தம் சம்பந்தமாகவும்கூட யாருடனும் கலந்துரையாடவில்லை என்றார்.

இதன்போது, குறுக்கீடு செய்த அமைச்சர் டக்ளஸ், நீங்கள் பொய்களைக் கூறவேண்டாம். கடற்றொழில் சங்கங்களுடன் கலந்துரையாடியே திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. நீங்கள் அதனைஅறியாதுவிட்டால் என்னால் எதுவும் செய்யமுடியாது என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், வடக்கு,கிழக்கில் உள்ள கடற்றொழிலாளர்கள் ஐம்பது வருடங்களுக்கு பிந்திய மீன்பிடி முறைமைகளையே பின்பற்றுகின்றார்கள். அவ்வாறு இருக்கையில் அட்டைப்பண்ணைகளை அறிமுகப்படுத்தி அந்த மீனவர்களின் வாழ்வாதாரத்தினை சிதைத்துள்ளீர்கள். அந்த மீனவர்களுக்கான உரிய இறங்குதுறைகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. ஆகவே அமைச்சர் சரியாக செயற்படுகின்றார்கள் என்றால் அவருக்குப் பின்னால் மக்கள் அணிதிரளுவார்கள் என்றார்.

## கடற்றொழிலாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

அண்மையில் தென் கொரியா நாட்டில் 41 கடற்றொழில் சார்ந்த நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஒரு மகாநாடு ;ஒரே சமுத்திரம், ஒரே கடற்றொழில் சமூகம்' என்ற தொணிப்பொருளில் இடம்பெற்றது. இதில் நானும் கடற்றொழில் அமைச்சர் என்ற வகையில், இலங்கை சார்பாக உத்தியோகப்பூர்வமாக கலந்து கொண்டிருந்தேன்.

இந்த மாநாட்டின்போது கருத்துக்களை முன்வைத்திருந்த உலக உணவு மற்றும் விவசாய அமைப்பினர் ஒரு விடயத்தை சுட்டிக் காட்டியிருந்தனர். அதாவது, கடல் வெப்பமயமாகல் அதிகரிப்பு, காலநிலை மாற்றம், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள்.

அதிகளவிலானகடலுணவுகளை அறுவடைசெய்தல், கழிவுகளை கடலில் கொட்டுவதால் கடல் மாசடைதல், சூழல் மாசடைதல் மற்றும் கடற் பகுதிகள் வெள்வேறு தேவைகளுக்கென நிரப்பப்படுதல் போன்ற காரணிகள் காரணமாக எதிர்காலத்தில் கடலில் மீனினங்கள் குறைந்து போகின்ற அபாயம் தென்படுவதாகவும், எனவே, நாம் நன்னீர் வேளாண்மையினை அதிகரிக்க முயற்சிக்கவேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேநேரம், ஒரு கிலோ இறைச்சியை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், அதற்கென 8 கிலோ உணவினை செலவிட வேண்டும் என்றும், ஆனால், ஒரு கிலோ நன்னீர் வேளாண்மையைப் பெற வேண்டுமானால், 1.2 கிலோ உணவினை செலவிட்டால் போதுமானது என்றும், மேலும், நன்னீர் வேளாண்மையானது, செலவு குறைந்ததும், சத்து கூடியதுமான உணவாகும் என்றும் மேலும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த கருத்து அங்கு தெரிவிக்கப்பட்டிருந்தாலும், இதற்கு முன்பதாக இதனை நான் உணர்ந்து கொண்ட நிலையில் நன்னீர் வேளாண்மையினை இந்த நாட்டில் பரவலாக முன்னெடுப்பது தொடர்பில் அதிக அவதானம் செலுத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள்.

அதேநேரம், கடல் வளங்கள் தொடர்ந்து பாதிப்படைந்து வருவதையும் நாம் இயன்றவரை தடுக்க வேண்டும். எனவே கடற்றொழில் தொடர்பில் உரிய முகாமைத்துவத்தினை மேலும் பலப்படுத்தி, அதனை உரிய முறையில் நடைமுறைப்படுத்தி, கடற்றொழில் அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டியதும் அவசியமாகின்றது.

கடற்றொழில் தொடர்பில் ஒழுங்குவிதிகளையோ, புதிய சட்டங்களையோ கொண்டுவர வேண்டுமானால, அதனை தாமே தீர்மானிக்க வேண்டும் என துறைசார்ந்த ஒரு சிலர் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களும் இதன்போது இல்லாமல் இல்லை.

'திருடனாகப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது' என ஒரு தமிழ்த் திரைப்படப் பாடல் இருக்கின்றது. அந்த வகையில் கடற்றொழிலாளர்களே உணர்ந்து, கடல் வளங்களை பாதிக்கின்ற தொழில் முறைகளில் ஈடுபடுவதை தவிர்த்து, அவர்கள் திருந்தாவிட்டால், கடல் வளங்களை பாதிப்புகளில் இருந்து காப்பாற்ற முடியாது என்பது எனது நிலைப்பாடாகும்.

கடற்றொழிலாளர்கள் எல்லோரும் இல்லாவிட்டாலும், ஒரு சிலர் மேற்கொள்கின்ற சில செயற்பாடுகள் காரணமாக கடல் வளங்கள் பாதிக்கப்படுவதையும் எமது கவனத்திற்கு அன்றாடம் கொண்டுவரப்படாமல் இல்லை. எனவே, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தில் எமது கடல் வளத்தினை முகாமைத்துவம் செய்வதை மேலும் பலப்படுத்துவதற்காகவும், அபிவிருத்தி செய்வதற்குமாக இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் பிரகாரம், இன்று சமர்ப்பிக்கப்படுகின்ற வரைபின் மூலமாக 1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கத்தைக் கொண்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 14 ஏ எனும் சரத்து நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் சரத்து புதிதாக சேர்க்கப்படுகின்றது.

தற்போது நடைமுறையில் இருக்கின்ற சட்டத்தின் 14 ஏ எனும் சரத்தின் பிரகாரம், ஏதேனும் அரசின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக, பிற நாடுகளின் கடற் பரப்புகளில் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால் அன்றி, எவரேனும் நபர் ஒருவரால் இப்பிரிவின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கின்ற தேசிய கடற்றொழில் படகினைக் கொண்டு, வேறொரு நாட்டின் தேசிய நீதிமன்ற அதிகாரப் பிரிவினுள் கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அப் படகினை பயன்படுத்துவது அல்லது பயன்படுத்துவதற்கு வழிசமைப்பது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள உப பிரிவின் விதிமுறைகளை மீறுகின்ற எவரேனும் நபரொருவர் இச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாவார் என்பதும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இங்கு எவரேனும் நபர் என்ற பதத்திற்கு உரிய வரைவிலக்கணம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில் பலநாட் கலங்களின் உரிமையாளர் சங்கத்தினர் தொடர்ந்து பல தடவைகள் கோரிக்கைகளை விடுத்து வந்துள்ளனர். அதாவது, கடற்றொழில் படகொன்று ஏதேனும் சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டால் அதனது அனுமதிப் பத்திரதாரர் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றார்.

அந்த சட்டவிரோத செயற்பாடு கடற்றொழில் படகின் அனுமதிப் பத்திரதாரருக்குத் தெரியாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், அனுமதிப் பத்திரதாரர், சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப் படுகின்றார். ஆனால், அதனது உரிமையாளரோ, ஓட்டியோ, பணியாளர்களோ அல்லது அதில் பயணிக்கின்ற நபர்களோ சட்ட நடவடிக்கைகளிலிருந்து நழுவி விடுகின்றனர்.

அவ்வாறு நழுவுகின்ற ஓட்டி, பணியாளர்கள், ஏனைய பயணிக்கின்ற நபர்கள் மறுதினமே வேறு கடற்றொழில் படகுகளில் தொழிலுக்குச் சென்றுவிடுகின்றனர். எனவே, அவர்களையும் குற்றவாளிகளாக சேர்த்து சட்டம் வகுக்கப்படல் வேண்டும். அவ்வாறு சட்டம் வகுக்கப்பட்டால்தான் இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த இயலும் என அவர்கள் தெரிவித்தனர்.

அந்த வகையில், நாமும் இது தொடர்பில் பலமுறை ஆராய்ந்து பார்த்து, தற்போது நடைமுறையில் இருக்கின்ற சட்டத்தில் அனுமதிப் பத்திரதாரர் என்ற பதத்திற்கு பதிலாக படகின் உரிமையாளர் என்றும், அந்தப் படகுக்கென வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தைக் கொண்டவர், படகின் ஓட்டி, அப்படகின் பணியாளர்களில் எவரேனும் உறுப்பினர், அக்குற்றம் நிகழ்ந்தப்பட்ட தருவாயில் அப்படகில் இருந்த எவரேனும் நபர் உள்ளடங்கலாக குற்றவாளிகளாக்கப்படுகின்ற வகையில் இத்திருத்தத்தை வகுத்துள்ளோம்.

எனினும், அவர்கள், அக்குற்றம் மேற்கொள்ளப்பட்டமையானது தான் அறிந்திராத வகையில் என்றோ அல்லது, அக் குற்றம் இடம்பெறுவதைத் தடுப்பதற்கென தன்னால் உரிய அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டதாகவோ ஒப்புவிக்கப்பட்டு, அது நிரூபிக்கப்பட்டால், அவ்வாறு ஒப்புவிக்கப்படுகின்ற காரணிகள் நிரூபிக்கப்படுகின்ற எவரேனும் நபர் அக்குற்றத்திற்கென குற்றவாளியாகக் கருதப்படமாட்டார் என்ற போதிலும், படகின் உரிமையாளரினை இத்தகைய குற்றங்கள் குறித்து குற்றவாளியாக்கப்பட வேண்டாம் என பலநாட் கலங்களின் உரிமையாளர்கள் கேட்டுக் கொண்டாலும், இது தொடர்பில் அவர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று உயர் நீதி மன்றம் அவர்களது அக் கோரிக்கையினை நிராகரித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கு மேலாக, புதிதாக அறிமுகஞ் செய்யப்படுகின்ற இச் சட்டத்தின் ஹுணு அ பிரிவின் 14 ச சரத்தின் கீழ் இலங்கைக் கடற் பரப்பிற்குள் அல்லது ஆழ் கடலில் ஏதேனும் சட்டவிரோத, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்கு முறையற்ற கடற்றொழில் செயற்பாடுகளை தடை செய்வதற்கான விதிமுறைகளும் உள்ளடக்கப் பட்டுள்ளன.

இதன்படி, இலங்கைக் கடற்பரப்பில் அல்லது ஆழ் கடலில் ஏதேனும் சட்டவிரோத, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்கு முறையற்ற கடற்றொழிலினை மேற்கொள்கின்ற நபரொருவரின், மேற்படி கடற்றொழில் செயற்பாட்டுக்கென பயன்படுத்திய கடற்றொழில் படகானது, கடற்றொழில் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தேசிய கடற்றொழில் படகெனக் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் நம்புவதற்கான நியாயமான காரணங்கள் இருக்கின்ற சந்தர்ப்பங்களின்போது, சந்தர்ப்பத்திற்கேற்ப, அந்த நபருக்கோ அல்லது அப் படகின் உரிமையாளருக்கோ விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர், கடற்றொழில் செயற்பாட்டு அனுமதிப் பத்திரத்தினையும், தேசிய படகினை பதிவு செய்கின்ற சான்றிதழையும் இடைநிறுத்துவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான விதிமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளன.

அதுபோன்றே, கடற்றொழில் சட்டத்தின் 46வது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரமுடைய அதிகாரி சார்ந்தோர்களது அதிகாரங்களுக்கு தடையேற்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களின்போது, படகின் நீளத்தினை கருத்தில் கொண்டு, தண்டனைக்கு உட்படுத்துவது போன்றே, படகொன்று இல்லாமல் மேற்கொள்ளப்படுகின்ற தொழில் சார்ந்த குற்றங்களின்போதும் தண்டனைக்கு உட்படுத்துவதற்கான விதிமுறைகள் இந்த திருத்தத்தின் மூலம் வகுக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த முன்மொழிவு திருத்தத்தின் மூலம் பிரதான நியதிச் சட்டத்தில் 49 ஆ மற்றும் 49 இ எனும் புதிய சரத்துகள் உட்படுத்தப்படுவதுடன், இந்த சரத்துகளின் மூலம் பிரதான நியதிச் சட்டத்தின் 14 ச சரத்து அல்லது (பிரதான நியதிச் சட்டத்தின் மூலம் வகுக்கப்பட்ட ஏதேனும் கட்டளை தவிர்ந்து) பிரதான நியதிச் சட்டத்தில் ஏதேனும் ஒழுங்குவிதிகளை மீறுகின்ற எவரேனும் நபர் தொடர்பில் இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டதாக தண்டனையொன்று குறிப்பிடப்படாத சந்தர்ப்பத்தின்போது, தண்டனை வழங்குவதற்கான விதிமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளன.

இந்த முன்மொழிவு திருத்தத்தின் மூலம், தற்போதைய கடற்றொழில் சட்டத்தில் அதிகாரமிக்க அதிகாரி என்பதற்கு கடற்றொழில் சட்டத்தின் 46 (1) உப சரத்தின் கீழ் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படுகின்ற கடற்றொழில் பரிசோதகர்களின் பதவி நிலைக்குக் குறையாத அதிகாரிகளும், சார்ஜன்ட் பதவி நிலைக்குக் குறையாத இலங்கை பொலிஸ், இலங்கை இராணுவம், விமானப் படை அதிகாரிகளும், சிறு அதிகாரிகள் பதவி நிலைக்குக் குறையாத இலங்கை கடற்படையின் அதிகாரிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் திருத்தத்தின் மூலம் 2009 41ஆம் இலக்கத்தைக் கொண்ட கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் எவரேனும், கலோரப் பாதுகாப்பு அதிகாரி என்ற வகையில் அதிகாரமிக்க அதிகாரி என்ற வரைவிலக்கணத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளார்.

அவ்வாறே, சட்டவிரோதமான,

தொடர்ச்சி 8ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# அஹிம்சைக்கும் ஜனநாயகத்திற்கும் மதிப்புத் தெரியாத நாட்டில் தமிழர்களுக்கு நீதி கிடைக்கப் போவதேயில்லை

## அருட்தந்தை மா.சத்திவேல் வேதனை



அஹிம்சைக்கும், ஜனநாயகத்திற்கும் மதிப்பு தெரியாத நாட்டில் தமிழர்களுக்கு நீதி கிட்ட போவதில்லை என சமூக நீதிக் கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களின் அஹிம்சை வழியிலான நீதிக்கான போராட்டத்திற்கு ஜனாதிபதி தலையிட்டு இறுதியாக நடந்த கலந்துரையாடலின் பின்பும் தீர்வு கிட்டாத நிலையில் பண்ணையாளர்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கு ஆதரவு தெரிவித்து பல்வேறு மட்டங்களிலும் குரல் எழுப்பி வரும் சூழ்நிலையில் வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஞாயிற்றுக்கிழமை ஜனநாயக வழியில் பண்ணையாளர்களுக்கு ஆதரவு தெரிவித்தும், அரசுக்கு தமது எதிர்ப்பினை வெளியிட்டும் மீள திரும்புகையில் அம் மாணவர்களில் அறுவர் அநியாய குற்றச்சாட்டுகளுக்களின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது இனரீதியில் பொலிஸார் நடத்திய அராஜகமே. அஹிம்சைக்கும், ஜனநாயகத்திற்கும் மதிப்பு தெரியாத நாட்டில் தமிழர்களுக்கு நீதி கிட்டப்போவதில்லை என்பதே உண்மை.

மட்டக்களப்பு அம்பிட்டிய சுமனரத்தின எனும் இனவாத, மதவாத பிக்கு பகிரங்கமாக இனவாதத்தைக் கக்கி, தூசன வார்த்தைகளை உமிழ்ந்து, அரச உத்தியோகத்தர்களைத் தாக்கி, பொலிஸாரைத் தாக்கி அராஜகம் புரிவது அனைவருக்கும் தெரிந்தது. அவரே மக்களை திரட்டி பொலிஸாரின் வீதி தடைகளை உடைக்க முற்படுவதும் ஜனாதிபதியை அவதூறாக பேசியதும் அண்மையில் சமூக ஊடகங்களில் காணக்கூடியதாக இருந்தது.

அத்தகைய ஒருவரை பொலிஸார் சாது சாது என காலில் விழுந்து வணங்கிக் கொண்டு ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் மாணவர்களைக் கைது செய்திருப்பது உரிமை மீறும் செயல் மட்டுமல்ல அது போராட்டத்தில் ஈடுபடும் தமிழர்களுக்கு எதிரான இனவாத அச்சுறுத்தலுமாகும்.

தமிழ் பண்ணையாளர்கள் மேய்ச்சலுக்கு விடும் கால்நடைகளை தமிழர்களுக்குச் சொந்தமானது என்பதற்காகவே வெட்டுவதும், கொலைசெய்வதும் இனத்துரோக செயலாகும். ஏழை தமிழர்களின் பொருளாதாரத்துக்கு எதிரான செயலுமாகும். அத்தோடு மிருக வதைக்கு உட்பட்ட தண்டனைக்குரிய குற்றமாகும். சட்டத்தைக் கையில் எடுத்து இத்தகைய கொடிய செயலினை தடுத்து நிறுத்த பொலிஸார் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தமிழ் பண்ணையாளர்களின் வாடிகளை எரித்து நாசமாக்கி உள்ளனர். அதற்குரிய விசாரணை இல்லை. காரணம் பாதிக்கப்பட்ட பண்ணையாளர்கள் தமிழர்கள் என்பதாகும். அவர்களின் பொருளாதாரத்தை அழிக்க வேண்டும், அவர்களின் பொருளாதார நிலத்தை ஆக்கிரமிக்க வேண்டும் எனும் இனவாதமாகும்.

பௌத்த சமயத்தை முன்னிலைப்படுத்தி வடக்கு கிழக்கின் தமிழர் நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் பேரினவாதம்; மேலும் தமிழர்களின் பல்லாயிரக் கணக்கான நிலங்களை ஆக்கிரமித்து இராணுவம் விவசாயம் செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. அதேபோன்று மயிலத்தமடு மாதவனை தமிழ் பண்ணையார்களின் பொருளாதாரத்தை அழிக்க முற்படுகின்றனர். இது நாட்டின் பொருளாதரத்தை அழிக்கும் செயலாகும்.

தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்காத தமிழருக்கு எதிராகப் போர் தொடுத்து நாட்டின் பொருளாதாரத்தை சூறையாடி கடனுக்குள் தள்ளிய இனவாத ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் கவலையற்று நாட்டின் பொருளாதாரம் அழிந்தாலும் பரவாயில்லை தமிழர்கள் பொருளாதார ரீதியில் முன்னேறி விடக்கூடாது என நினைப்பது தமிழர்களுக்கும் அவர்களின் பொருளாதாரத்துக்கும் எதிரான இன அழிப்பு போரின் மாற்று வடிவமாகும்.

வடக்கு கிழக்குத் தமிழர்களின் மண் மீட்புக்காக போராடி உயிர் தியாகம் ஆனோரை நினைவு கூருவதற்காக அவர்களின் துயிலும் இல்லங்களே ஆயத்தப்படுத்தும் இக்காலகட்டத்தில் துயிலும் இல்லங்களில் இருந்து எழும் அவர்களின் ஏழுச்சி குரல்களுக்கு செவி மடுப்போம். மாவீரர் நடந்த திரிந்த நிலமெங்கும் அவர்களின் உயரிய லட்சியத்தை அடையாளப்படுத்தி அதனை நிறைவேற்றுக்கான மாற்று வழியிலான போராட்டத்தை மாவீரர் வாரத்துக்கு முன்னர் நடத்தி ஏற்றவுள்ள தியாகச் சுடர்களை உயிர்புள்ளதாக்க சிவில் சமுகம் முன்வர வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (05)

# 11 ஆயிரம் நுண்கடன் நிதி நிறுவனங்களில் 5 நிறுவனங்கள் மாத்திரமே பதிவுசெய்தன

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் தகவல்

நுண்கடன்நிதிநிறுவனங்களின் முறையற்ற செயற்பாடுகளினால் சுமார் 30 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாட்டில் 11 ஆயிரம் நுண்கடன் நிதி நிறுவனங்கள்இயங்குகின்றநிலையில் அவற்றில் 05 நிறுவனங்கள் மாத்திரமே பதிவு செய்துள்ளன.

நுண்கடன் நிறுவனங்களைக் கண்காணிப்பதற்கு நுண்கடன் நிதி நிறுவன அதிகார சபை ஸ்தாபிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

மஹரக பகுதியில் இடம்பெற்ற நிகழ்வின்பின்னர்ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நுண்கடன்நிதிநிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகள் சர்வதேச மட்டத்தில் பேசப்படுகின்றன.நுண்கடன்களை முன்னிலைப்படுத்திய தற்கொலைகள், முரண்பாடுகள் உள்ளிட்ட பல பிரச்சினைகள் சமூகக் கட்டமைப்பில் காணப்படுகின்றன.

நுண்கடன்நிதிநிறுவனங்களின் முறையற்ற செயற்பாடுகளால் சுமார் 30 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாட்டில் 11 ஆயிரம் நுண்கடன் நிதி நிறுவனங்கள்இயங்குகின்றநிலையில் அவற்றில் 05 நிறுவ னங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதிவுசெய்யபதிவுசெய்யப்படாத நிதிநிறுவனங்கள்தான்முறையற்ற வகையில் செயற்படுகின்றன. நிதி நிறுவனங்களைப் பதிவு செய்வதைக் கட்டாயப்படுத்தும் சட்டமூலம் எதிர்வரும் மாதமளவில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும். பதிவு செய்யாத நிறுவனங்கள் 05 லட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டும்.தண்டப்பணம்செலுத்த தவறும் பட்சத்தில் 5 வருடகால சிறைத்தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.நுண்கடன்நிதிநிறுவனங் களைக்;கண்காணிக்கும்வகையில் நுண்கடன் கண்காணிப்பு அதிகார சபை அடுத்த ஆண்டு ஜனவரி மாதமளவில் ஸ்தாபிக்கப்படும். இதனைத் தொடர்ந்து சகல நுண்கடன் நிதி நிறுவனங்களும் மத்திய வங்கியால் நேரடியாகக் கண்காணிக்கப்படும். - என்றார். (05)



# தன்னுடன் சேர்த்து ஓட்டோக்கும் பண்டாரகமவில் தீ வைத்த நபர்

நபரொருவர் தனக்;கும் தனது ஓட்டோவுக்கும் தீ வைத்த சம்பவம் பண்டாரகம ஹத்தாகொட பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த 54 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை, தற்போது ஹொரணை ஆரம்ப வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் குடும்பத் தகராறு காரணமாக அந்நபர் இத்தவறான முடிவினை எடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த நபரின் ஓட்டோவும் தீயில் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# பொருத்தமான ஒருவரைப் பொலிஸ் மா அதிபராக ரணில் விக்ரமசிங்க விரைவில் நியமிப்பார்

## ஆஷ மாரசிங்க நம்பிக்கை

பொலிஸ்மா அதிபராக அரசமைப்பு பேரவை பிரேரிக்கும் நபரை நியமிப்பதற்கும் நியமிக்காமல்இருப்பதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது. அதன் பிரகாரம் விரைவில் தகுதியான ஒருவர் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படுவார் என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில்இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

பொலிஸ் அதிபர் நியமனம் தொடர்பாக அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கே பூரண அதிகாரம் இருக்கிறது. ஜனாதிபதி பெயர் குறிப்பிட்டு அரசமைப்பு பேரவைக்கு அனுப்பும் நபர்கள் தொடர்பாக அவர்களின் நிலைப்பாட்டை ஜனாதிபதிக்குத் தெரிவிக்கும் அதிகாரம் அரசமைப்பு பேரவைக்கு இருக்கிறது.

அதற்காக அவர்கள் பெயர் குறிப்பிட்டு அனுப்பும் நபரைத்தான் பொலிஸ் மா அதிபராக நியமிக்க வேண்டும் என்பதில்லை. ஜனாதிபதி தனக்கு விரும்பியவரை பொலிஸ்மா அதிபராக நியமிக்க அரசமைப்பின் ஊடாக ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் உயர் பதவிகளுக்கு ஆள்களை நியமிக்கும்போது அதனை வெளிப்படைத்தன்மையாக மேற்கொள்ள வேண்டும் என்பதற்கே அரசமைப்பு பேரவைக்கு ஜனாதிபதி பெயர்களைப் பரிந்துரை செய்கிறார். அரசமைப்புப் பேரவை பிரேரிக்கும் நபரை நியமிப்பதற்கும் நியமிக்காமல்இருப்பதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது. அதனால் நாட்டை நிர்வகித்து செல்லும் ஜனாதிபதிக்கு, அவருக்கு பொருத்தமான ஒருவரை பொலிஸ்மா அதிபராக நியமிக்க விரைவில் நடவடிக்கை எடுப்பார்.

மேலும்சிலபதவிகளுக்கு நியமிக்கும் போது, அந்த நபர் குறித்த பதவிக்கு பொருத்தமானவரா? அதற்கான திறமை அவரிடம் இருக்கிறதா போன்ற அனைத்து விடயங்களையும் தெரிந்துகொண்டே பதவி வழங்க வேண்டி இருக்கிறது. அதனால் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படுபவர் தொடர்பாக அனைத்து தகுதிகளையும் கவனத்திற்கொண்டே ஜனாதிபதி புதிய பொலிஸ் மா அதிபரை நியமிக்க இருக்கிறார். - என்றார். (05)

# 40 லட்சம் ரூபா ஐஸ் போதைப் பொருளுடன் உள்ளூர் விற்பனை முகவர் மன்னாரில் கைது

மன்னாரில் நீண்ட காலமாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட நபர் மற்றும் அவரிடம் இருந்து போதை பொருளைக் கொள்வனவு செய்த நபர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து ஐஸ் வகை போதை பொருளும் திங்கட்கிழமை காலை 11.45 மணி அளவில் கைப்பற்றப்பட்டுள்ளது.

மன்னார், புதுக்குடியிருப்பு, எருக்கலம்பிட்டி, தாராபுரம் உட்பட்ட பலபகுதியில் நீண்ட காலமாக போதை பொருள் விற்பனையாளராகவும் விற்பனை முகவராகவும் செயற்பட்ட குறித்த நபர் மன்னார் குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினரால் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தொடர்பில் திங்கட்கிழமை மன்னார் குற்றப்புலனாய்வு பிரிவின் அதிகாரி விபுர்த்திக்கு கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபாலவின் பணிப்புரைக்கு அமைவாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஹேரத்தின் ஆலோசனையின் பெயரில் குற்றப்புலனாய்வு பிரிவு சார்ஜன் ரத்ண மனல தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது போதை பொருள் விற்பனையின் போது குறித்த நபர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் போதை பொருளை கொள்வனவு செய்தவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவரும் மன்னார் புதுக்குடியிருப்பு பகுதியை சேர்ந்த 31 மற்றும் 20 வயதுடைய நபர்கள் என்பதுடன் புதுக்குடியிருப்பு பாடசாலைக்கு அருகில் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட நபர்களிடம் இருந்து 21 கிராம் 9 மில்லி கிராம் ஐஸ் ரக போதைப்பொருள் மற்றும் 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் மற்றும் 2 கைபேசிகள் மீட்கப்பட்டுள்ளது.

அதே நேரம் பிரதான சந்தேக நபருக்கு ஒரு கிலோ ஐஸ் போதை பொருள் விற்பனைக்காக வந்த நிலையில் 21கிராம் போதைப்பொருள் தற்போது கைப்பற்றப்பட்டுள்ள நிலையில் மிகுதி போதைப் பொருள்களைத்தேடும்நடவடிக்கையில் மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் ஈடுபட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆபத்தில் தள்ளிவிடக்கூடாது

**விலங்குகளால் விவசாயத்திற்கு ஏற்படும் சேதங்களைத் தடுக்கும் நோக்கத்துடன் விவசாயிகளுக்கு 'ஏர் ரைபிள்கள்' எனப்படும் துப்பாக்கிகளை விநியோகிக்க ஆளும் தரப்பு எடுத்துள்ள முடிவு விமர்சனங்களுக்குள் உள்ளாகியுள்ளது. இந்த முடிவால் திட்டமிடப்பட்ட விளைவுகளுக்குப் புறம்பான பல சமூக விளைவுகள் ஏற்படும் என்று அஞ்சப்படுகின்றது.**

**விவசாய அமைச்சின் கூற்றுப்படி, ஐப்பசி 22 முதல் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் 'ஏர் ரைபிள்கள்' விநியோகிக்கப்படுகின்றன. கடந்த மாத இறுதிக்குள் மட்டும் மொத்தம் 250 துப்பாக்கிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. விவசாயத்திற்கு குரங்கள், மயில்கள், பன்றிகள் போன்ற விலங்குகளால் அதிகளவில் பாதிப்பு ஏற்படுவதாகத் தெரிவித்தே விவசாய அமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.**

**இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கையின் சிறுவன் குரங்குகளை சீனாவிற்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் ஒன்றை விவசாய அமைச்சு முன்பு கையில் எடுத்தது. ஆனால், அது மனித உரிமை ஆர்வலர்களின் கடும் எதிர்ப்பைச் சந்தித்ததை அடுத்து கைவிடப்பட்டது. அதன் பின்னரே இந்த விலங்குகளின் பிரச்சினைக்குத் தீர்வாக 'ஏர் ரைபிள்' வழங்கும் திட்டத்திற்கு விவசாய அமைச்சு வந்துள்ளது.**

**ஒரு சிறிய ஈய உருண்டையை தானியங்கித் துப்பாக்கி போன்று அதிவேகமாக 1000 அடிக்கு மேல் தொடர்ச்சியாகச் சுடும் வல்லமை கொண்டவை இந்த 'ஏர் ரைபிள்கள்'. சிறு விலங்குகளைத் தாக்கி உயிரிழக்க வைக்குமளவிற்குச் சக்தி வாய்ந்தவை. இதனால் சுடப்படும் விலங்குகள் குறைந்தபட்சம் கொடூரமான காயங்களுக்கு உள்ளாகும் என்று விலங்குரிமைப் பாதுகாவலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

**இந்த ஏர் ரைபில்களால் விலங்குகளுக்கு மட்டுமல்ல மனிதர்களுக்குமேகூடப் பாதிப்பு ஏற்படலாம் என்பதுதான் இப்போது அதிகரித்துள்ள கவலை. இந்த வகைத் துப்பாக்கிகளைக் கொண்டு மிக நெருக்கமாக இருந்து சுடும்போது அது மனிதர்களையும் மிக மோசமாகக் காயப்படுத்தும். சில சமயங்களில் உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தக்கூடும். ஏற்கனவே பாதாள உலகக் குழுக்கள் பயங்கரத் துப்பாக்கிகளைவைத்து தமக்கிடையே சண்டையிட்டுக்கொண்டிருக்கும் நிலையில், 'ஏர் ரைபிள்களின்' பயன்பாடு சமூகத்தில் இன்னும் அதிகமான துப்பாக்கியால் விளையும் குற்றங்களுக்குக் காரணமாகும் என்று சமுக ஆர்வலர்கள் அஞ்சுகின்றனர்.**

**இங்கே பிரச்சினை என்னவென்றால், இந்த 'ஏர் ரைபிள்களை' முறையாகவும் ஒழுங்காகவும் பயன்படுத்துவதற்கான ஒழுங்கான தெளிவான ஒழுங்கு விதிகள் இல்லாமைதான். இதனைக் கையாள்வதற்கும், தவறாகப் பயன்படுத்தப்பட்டால் அதன் விளைவுகள் என்னவென்று புரிய வைப்பதற்குமான பயிற்சிகள் எவையும் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதில்லை.**

**பொதுமக்கள் தமது பாதுகாப்புக்கு ஆயுதங்களைப் பெற்றுக்கொள்வதாயின் பாதுகாப்பு அமைச்சு ஊடாக அதற்கு இறுக்கமான நடைமுறைகள் உள்ளன. அவ்வளவு சுலபத்தில் அதனைப் பெற்றுவிட முடியாது. இறுக்கமான விதிகளும் கட்டுப்பாடுகளும் கண்காணிப்பும் அதற்கு இருக்கின்றது. ஆனால் இந்த 'ஏர் ரைபிள்களுக்கு' அத்தகைய கட்டுப்பாடுகள் எவையும் இல்லை. ஆனால் ஆயுதங்களுக்கு நிகரான பாதிப்பை இந்தத் துப்பாக்கிகளாலும் நிகழ்த்த முடியும் என்பதுதான் இங்கிருக்கும் ஆபத்து.**

**சமூக ஆர்வலர்கள் மற்றும் சில விவசாய தொழிற்சங்கவாதிகள்கூட பயிர் சேதத்தை குறைக்க அல்லது தடுக்க 'ஏர் ரைபிள்'களை வழங்குவது குறித்து சந்தேகம் எழுப்பியுள்ளனர். 'ஏர் ரைபிள்'கள் மற்றும் 'ஏர் பிஸ்டல்'கள் குற்றக் குழுக்களின் வசம் இருப்பது ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டாலும், குற்றச்செயல்களில் அவற்றின் பயன்பாடு அரிதாகவே பதிவாகியுள்ளது என்று காவல்துறையினரின் தரப்பில் கூறப்படுகின்றது. அது மட்டுமே இந்தத் துப்பாக்கிகள் சமூகத்தில் அதிகளவில் பயன்பாட்டுக்கு வருவதை அனுமதிப்பதற்குப் போதுமானது அல்ல.**

**'ஏர்ரைபிள்' மற்றும் 'ஏர்பிஸ்ரல்' என்பன சட்டத்தின்படி மனிதர்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் துப்பாக்கிகளாக வகைப்படுத்தப்படவில்லை. 1900 ஆண்டு முதல் இலங்கையில் அவை பயன்பாட்டில் இருந்து வருகின்றன. அனேகமாக பாடசாலைகளில் துப்பாக்கி சுடும் போட்டிகளில் அல்லது கடேற் பயிற்சிகளுடன் தொடர்புபட்டவையாக அவை இருந்துள்ளன.**

**அவற்றால் விலங்குகளை மட்டுமல்ல ஒரு நபரையும் கொல்ல முடியும். அதாவது முயல்கள், அணில்கள், கொறித்துண்ணிகள், குரங்குகள், புறாக்கள் மற்றும் பிற பறவை பூச்சிகள் போன்றவற்றைக் கொல்வதைப் போன்றே தெரிந்தோ தெரியாமலோ சிறுவர்கள் மற்றும் ஆள்களையும் கொல்ல முடியும்.**

**பிரித்தானியா போன்ற பல வெளிநாடுகளில், இது போன்ற துப்பாக்கிகளுக்கான சட்டங்கள் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன, 'ஏர்ரைபிள்' உரிமம் வைத்திருப்பதற்கான தகுதியை நிரூபிக்க அங்கு விதிகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. அந்தத் துப்பாக்கிகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும், எங்கு, எந்த சந்தர்ப்பங்களில் பயன்படுத்தக்கூடாது என்பதற்கான கடுமையான வழிகாட்டுதல்களும் உள்ளன, வழிகாட்டுதல்களைத் தவறாகப் பயன்படுத்தினால் கடுமையான தண்டனைகள் உள்ளன. அப்படிப்பட்ட இறுக்கமான வழிகாட்டுதல்கள் இன்றி கட்டுப்பாடுகள் இன்றி இந்த துப்பாக்கிகள் பயன்பாட்டுக்கு வந்திருப்பதுதான் ஏற்புடையதல்ல. இதனை ஆளும் தரப்பு மீள்பரிசீலனை செய்யவேண்டும்.**

# சஜித்தும் ராகுல் காந்தியும் புலிகளின் பின்னணியில்....

உபுல் யோசப் பெர்னான்டோ



விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் 1989 இல் பிரேமதாசவுடனான சமாதானப்பேச்சுக்குஒருகுழுவை கொழும்புக்கு அனுப்பினார். புலிகள் அமைப்பின் துணைத் தலைவர் மாத்தையாவே அந்தக் குழுவின் தலைவராக இருந்தார். சமாதானப் பேச்சுவார்த்தை மேசையில், அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவை மாத்தையாவால் ஈர்க்க முடிந்தது. பிரேமதாச மாத்தையாவைச் சந்தித்தபோது அவர் ஓர் அற்புதமான முன்மொழிவைச் செய்தார்.

"உங்களைப் போல நானும் ஒரு சிறு வகுப்பில் இருந்து தொடங்கிய மனிதன். உங்கள் பயணத்தில் நான் பெருமைப்படுகிறேன். உங்களுடன் பணியாற்றுவது எனக்கு மிகவும் பிடிக்கும்..." என்றார் மாத்தையா.







"நீங்கள் வடக்கு-கிழக்கு முதலமைச்சராகவேண்டும். நான் உதவுவேன். ஒன்றிணைந்துசெயற்படுவோம்..." என்றார் பிரேமதாச.

மாத்தையாவுக்கும் பிரேமதாசாவுக்கும் இடையில் உருவான நெருங்கிய உறவு, புலிகளின் பிரதிநிதிகளால் உணரப்பட்டது. உடனடியாக இதுபற்றி பிரபாகரனுக்குத் தெரிவித்தனர். பிரபாகரன் சமாதானப் பேச்சை உடனடியாக நிறுத்த விரும்பினார். ஆனால் மாத்தையா ஒப்புக்கொள்ளவில்லை. பிரபாகரன் தூதுக்குழுவை உடனடியாக வடக்குக்கு வருமாறு உத்தரவிட்டார். பிரபாகரனின் கட்டளைக்கு மாத்தையா கீழ்ப்படியவில்லை.

அப்போதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கத்தைக் கொல்ல பிரபாகரன் ஆள் அனுப்பினார். அமிர்தலிங்கம் கொல்லப்பட்டபோது, பிரேமதாச பேச்சுக் குழுவினரை உடனடியாகக் கொழும்பில் இருந்து வெளியேறுமாறு கூறினார். கொழும்பில் பேச்சுக் குழு திரும்பி வந்ததும் மாத்தையாவை விடுதலைப் புலிகள் அமைப்பின் துணைத் தலைவர் பதவியில் இருந்து பிரபாகரன் நீக்கினார்.

இந்தச் சம்பவமே பிரபாகரனுக்கும் பிரேமதாசாவுக்கும் பகையை ஏற்படுத்தியது.

சிறிது காலத்திற்குப் பின்னர், பிரபாகரனின் வலது கையான கிட்டு (அவரது இடது கை மாத்தையா) ஆயுதங்களை ஏந்திய கப்பலில் நேபாளம் வழியாக இலங்கையின் வடக்கு நோக்கி வந்துகொண்டிருந்தார். அப்போது இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டிருந்தார், இந்தியா விடுதலைப் புலிகளைத் துரத்திக்கொண்டிருந்த காலம். இந்தியாவின் புலனாய்வுப் பிரிவினர் பிரேமதாச தரப்புக்குக் கிட்டுவின் கப்பலை அடையாளப்படுத்திக் காட்டினர். விடுதலைப் புலிகளின் கப்பலைத் தாக்கி அழிக்கும் கூட்டு நடவடிக்கையை மேற்கொள்ள இந்தியக் கடற்படைக்கும் இலங்கை கடற்படைக்கும் பிரேமதாசாவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. கப்பலைப் பற்றித் தகவல் கொடுத்தது மாத்தையா என்று பிரபாகரன் நினைத்தார். அந்தச் சந்தேகத்தின் பேரில் மாத்தையா கைதுசெய்யப்பட்டார். பின்னர் துரோகி என முத்திரை குத்தப்பட்டுக் கொல்லப்பட்டார்.

தனக்கும் மாத்தையாவுக்கும் இடையே மோதலை உருவாகியதற்கும் கிட்டுவின் கப்பல் எரிக்கப்பட்டதற்கும் பிரேமதாச தான்காரணம்என்றுசந்தேகப்பட்ட பிரபாகரன், பிரேமதாசாவைக் கொல்ல பாபு என்ற தற்கொலைக் குண்டுதாரியை கொழும்புக்கு அனுப்பினார். பிரேமதாசாவை கொன்றது மட்டுமன்றி, அதற்கு முன் அத்துலத்முதலியையும் கொன்று, கொலைப்பழியை பிரேமதாசா மீது சுமத்தினார். அப்போது, பிரபாகரனின் கயிற்றை விழுங்கி லலித்தை கொன்றது பிரேமதாசதான் என சிறீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர். ஆனால் லலித் கொல்லப்பட்டு ஒரு வாரத்தில் பிரேமதாச கொல்லப்பட்டபோது அனைவரின் கண்களும் திறந்தன.

பிரபாகரன் பிரேமதாசவை இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்த நினைத்தார். அப்போது அவர் இந்தியாவின் மீது பற்று கொண்டிருந்தார். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட பிரபாகரனின் சம்மதத்தைப் பெற, அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி பிரபாகரனை சிறப்பு விமானத்தில் இந்தியாவுக்கு அழைத்து வந்தார். ராஜீவ் அவரை சந்தித்து ஒப்பந்தத்திற்கு சம்மதிக்க சொன்னார். பிரபாகரன் ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துவிட்டார். ஒப்பந்தம் கையெழுத்தாகும் வரை ராஜீவ் பிரபாகரனை டெல்லி ஹோட்டலில் வீட்டுக் காவலில் வைத்திருந்தார்.

"இந்தியா நமக்கு துரோகம் செய்து விட்டது. இதை என்னால் எளிதில் மறக்க முடியாது..."

பிரபாகரன் தனது சகாக்களிடம் இப்படிக் கூறியிருக்கிறார். அப்போதுதான் ராஜீவைக் கொல்ல பிரபாகரன் முடிவு செய்தார். ராஜீவ் தமிழகத்தில் பொதுத் தேர்தல் கூட்டத்திற்கு வருவதற்கு முன், பிரபாகரனால் ராஜீவைச் சந்திக்க ஒரு தூதுக்குழு அனுப்பப்பட்டது.

"நான் பிரதமரானவுடன், உங்கள் பிரச்னையை தீர்த்து வைப்பேன்..." என்று ராஜீவ் பிரபாகரனின் தூதுக்குழுவினரிடம் கூறினார். ராஜீவ் விடுதலைப் புலிகளை சமாதானப்படுத்தி தமிழ்நாட்டின் வாக்குகளைப் பெற நினைத்தார். ஆனால் ராஜீவ் நடிக்கிறார் என்பது பிரபாகரனுக்குத் தெரியும். ராஜீவ் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபோதே, ராஜீவ் மீண்டும் பிரதமரானால் தங்கள் கதையை முடித்துவிடுவார் என்று பிரபாகரன் நினைத்தார்.

பிரபாகரனுக்கு எதிராக மகிந்த ராஜபக்ச ஆட்சி போரை அறிவித்தபோது சோனியா காந்தி தனது கணவரைப் பிரபாகரனைக் கொன்றதற்குபழிவாங்கினார். தமிழக முதல்வர் கருணாநிதி உள்ளிட்ட தமிழக அரசியல்வாதிகள் போரை நிறுத்தக்கோரியும் போர் நிறுத்தம் செய்யக்கோரியும் போராடிக் கொண்டிருந்தபோது சோனியா காந்தியின் காங்கிரஸ் அரசு மகிந்தவின் அரசுக்கு ஆதரவளித்தது. ஒருமுறை போரை நிறுத்த இந்தியா தலையிடாவிட்டால் காங்கிரஸ் அரசை கவிழ்ப்பேன் என்று கருணாநிதி மிரட்டியபோது, கருணாநிதியின் குடும்ப ஊழல் கோப்பைக் காட்டி கருணாநிதியின் வாயை அடைத்தது காங்கிரஸ் அரசு.

அப்போது, ஐ.தே.கவின் வளர்ந்து வரும் தலைவராக இருந்த சஜித் பிரேமதாசவும் மகிந்த அரசின் போரை ஆதரித்தார். மகிந்த ஆட்சியின் இராணுவ நடவடிக்கைகளை அவரது ஐக்கிய தேசியக் கட்சி கேலி செய்தபோதும் சஜித் இராணுவத்திற்கு ஆதரவாக நின்றார். 2018 ஆம் ஆண்டு, ராஜீவ் காந்தியின் மகன் ராகுல் காந்தி, பிரபாகரன் கொல்லப்பட்டபோது தானும் அவரது சகோதரி பிரியங்கா காந்தியும் மகிழ்ச்சியாக இல்லை என்று கூறினார். பிரபாகரனின் குழந்தைகளின் கண்ணோட்டத்தில் தன்னைப் பார்க்கிறேன் என்று கூறினார். தமிழ்நாட்டுக்குச் சென்றுதான் அவர் இந்தக் கதையைச் சொன்னார்.

பிரேமதாசவின் மகன் சஜித்தும் 2019 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தமிழ் மக்களின் வாக்குகளை கோரினார். தென்னிலங்கை கோத்தபாயவுக்கு வாக்களித்தபோது, வடக்கு பிரபாகரனால் கொல்லப்பட்ட தந்தையின் மகன் சஜித்துக்கு வாக்களித்தது.

இப்போது இந்தியாவில் 2024 பொதுத் தேர்தலுக்காக ஆட்சி அமைக்க ராகுல் காந்தி தயாராகி வருகிறார். சஜித் பிரேமதாச 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியாக ஆணையைப் பெறுவதற்கு தயாராகி வருகிறார். இவர்கள் இருவரும் பிரபாகரனால் கொல்லப்பட்ட இரண்டு தந்தைகளின் மகன்கள். பிரபாகரனால்தான் அவர்கள் அரசியலுக்கு வர நேரிட்டது. மேலும், பிரபாகரனால் செல்வாக்குச் செலுத்தப்பட்ட தமிழ்நாட்டையும், வட இலங்கையையும் வென்று ஆட்சியைப் பிடிக்கப்போகிறார்கள்.

# வரவு – செலவுத் திட்டம் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்க ஜனாதிபதி முயற்சி

## ஆஷூ மாரசிங்க கூறுகிறார்



நாட்டின் பொருளாதார நெருக் கடியை முகாமைத்துவம் செய்துகொண்டு மக்களுக்கு வரவு - செலவுத் திட்டம் ஊடாக முடியு மான நிவாரணங்களை வழங்க ஜனாதிபதி முயற்சித்து வருகிறார் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷூ மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையி லேயே இவ் வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரி விக்கையில் -

அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பை ஜனாதிபதி வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்வார் என்ற விடயத்தை அறிந்த தொழிற்சங்கங் கள் போராட்டங்களை மேற்கொண் டதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வெற்றியாகக் கருத முயற்சிக்கின்றனர்.

ஆனால் நாட்டு மக்கள் எதிர் கொண்டுவரும் கஷ்ட நிலைமை ஜனாதிபதிக்குத் தெரியும். அதேபோன்று நாட்டைக் கொண்டு செல்ல வேண்டிய வழியும் ஜனாதிபதிக்குத் தெரியும்.

இந்த அனைத்து விடயங்களையும் முகாமை த்துவம் செய்துகொண்டு முடியுமானளவு ம க்களுக்கு நிவார ணம் வழங்குவதற்கே ஜனாதி பதி முயற்சிக்கிறார்.

அத்துடன் இந்த விடயங்களைச் செய்வதற்கு அரசாங்கத்திடம் பணம் இருக்கிறதா என்ற கேள்வி இருக் கிறது. ஆனால் அரசாங்கத்துக்கு கிடைக்கவேண்டிய வரி வருமா னங்களை சேர்த்துக்கொள்வதை முறையாக மேற்கொள்வது அவசியமா கும். அதனை முறையாக மேற் கொள்ள அரசாங்கம் பல விசேட வேலைத்திட் டங்களை மேற்கொண்டிருக்கிறது.

நாட்டின் வருமானங்களை ஒன்றுசேர்ப்பதற்காக ஜனாதிபதி காரி யாலயத்தில் விசேட குழுவொன்றை அமைத்திருக்கிறது. அதேபோன்றுநாடாளுமன்றத்தில் வழிவகைகள் பற்றிய குழு ஊடாக நாட்டின் வரு மானங்களைச்சேர்க்கும்வேலைத்திட்டம்செயற்பட்டு வருகிறது. நிதிக்குழுவிலும் இதுதொடர்பான நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

மேலும் 2017 இல் நாங்கள் 3 ரில்லியன் வருமானம் பெற்றுக் கொண்டோம். அதனால் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டால் எம க்குத் தேவையான வருமா னங்களை ஏற்படுத்தி க்கொள்ள முடியுமாகி இருக்கிறது.

நாட்டின் வரி வருமானங்கள் மற்றும் வேறு வருமானங்களை சேர்க்கும் 40 நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த நிறுவனங்கள் தொடர்பாக நாங்கள் முறையாக ஆராய்ந்து பார்த்துள் ளோம்.

அதனால் நாட்டுக்கு வரவேண்டிய வரி வரும ானங்கள் மறறும் ஏனைய வருமானங்களை நாங்கள் முறையாக சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தால் வரி அதிகரிக்கும் தேவை ஏற்படாது. அதேநேரம்இந்தவரிவருமானங்கள்அனைத்தையும் சேர்க்க முடியுமானால் எமக்கு 3 ரில்லியன் ரூபா வரை வருமா னத்தை சேர்த்துக்கொள்ள முடியு மாக இருக்கும்.

என்றாலும் சில அதிகாரிகள் வரி வருமானத்தைச் சேர்ப்பதற்குப் பதிலாக வரும் பணத்தை அவர்களின் பொக்கெட்டுக்குள் போட்டுக்கொள்ளும் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது. இவ்வாறான அதிகாரிகள் தொடர்பில் அறிந்தால் அது தொடர்பாக தகவல் தெரிவிக்க ஆணைக்குழுவில் முறை யிடலாம். அதனால் நாட்டில் மாற் றத்தை ஏற்படுத்துவதாக இருந்தால் மாற்றத்தை எம்மில் ஆரம்பிக்க வேண்டும். - என்றார்.

(05)

# லலித்கொத்தலாவல பணயக்கைதியாக இருந்தார் இருட்டறையிலும் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்!

## நீதிமன்றத்தில் குடும்பத்தவர்கள் பரபரப்புத் தகவல்

சிலிங்கோ குழுமத்தின் முன்னாள் தலைவர் லலித்கொத்தலாவலை சில ரால் பணயக்கைதியாக வைக்கப்பட்டிருந்தார் எனவும் அவர் சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதிக்கப்படவில்லை எனவும் அவரது குடும்பத்தினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

லலித்கொத்தலாவலையை பணயக்கைதியாக வைத்தி ருந்த சட்டத்தரணிகள் உட்பட்ட குழுவினர் அவரை அச்சத்தின்பிடியில் சிக்கவைத்தனர் என அவரது உறவினரான சிறீனி விஜயரட்ண நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் லலித்கொத் தலாவலையின் விசாரணை இடம்பெற்றபோதே குடும்பத்தவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

லலித்கொத்தலாவலையை சுற்றியிருந்தவர்கள் அவரின் சொத்துக்களை தங்கள் பெயருக்கு எழுதிவாங்கிக்கொண்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொத்தலாவல இருட்டறையில் அடைத்துவைக்கப்பட்டிருந்தார் அவரது படுக்கை அறையிலிருந்து தனது அலுவலக அதிகாரிகள் கூடத்தி ற்கு செல்வதற்கு மாத்திரம் அனுமதி க்கப்பட்டார்எனஅவர்தெரிவித்துள்ளார்.

அவரை வீட்டிலிருந்து வெளியேறச் செய்து அலுவலகத்திலேயே இருண்ட அறையொன்றிற்குள் அவர்கள் தங்கவைத்தனர் எனவும் அவர் தெ ரிவித்துள்ளார். (05)

# சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டயஸிக்கு கொழும்பு நீதிவான்மன்றம் அழைப்பாணை!

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ உள்ளிட்டோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் சாட்சியமளிப்பதற்காக நீதிமன்றில் ஆஜராகுமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகர் ரொான் டயஸுக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது. கறுவாக்காடு பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ், சாட்சியான சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகரை பெப்ரவரி 26 ஆம் திகதி நீதிம ன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பித்தார்.

இந்த வழக்கு திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டபோது, பொலிஸ் அதி காரிகளின் சாட்சியங்கள் பதிவு செய்யப் பட்டன.

இந்த வழக்கில் முன்னாள் அமைச் சர் விமல் வீரவன்ஸ, நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர, வீரகுமார திஸாநாயக்க, பியசிறி விஜேநாயக்க, ரோஜர் செனவிரத்ன மற்றும் மெ ாஹமட் முஸம்மில் ஆகியோர் குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

2016 ஆம் ஆண்டு அப்போதைய ஐக்கிய நாடுகள் சபையின் ம னித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, கொழும்பு தும்முல்லையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை யகத்தைச் சுற்றி வீதிகளை மறித்து போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்தி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு, பொதும க்களுக்கு இடையூறு விளைவித்ததாக குற்றஞ்சாட்டி கறுவாக்காடு பொலிஸார் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந் தனர். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நிகழ்நிலைகாப்பு சட்டமூலத்தை மீளப்பெறும் அளவுக்கு மக்கள் போராட்டம் தீவிரமடையும்

## சாலிய பீரிஸ் எச்சரிக்கை



நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை அரசாங்கம் மீளப்பெறும் அளவுக்கு மக்கள் போராட்டம் தீவிரமடைய வேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

இதேவேளை, சகல பிரச்சினைகளுக்கும் நீதிமன்றத்தால் தீர்வு வழங்க முடியாது என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் குறிப்பிட்டார்.

வேண்டாம் வாயை மூடும் சட்டங்கள் என்ற மக்கள் கருத்தரங்கு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றபோதே சாலிய பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார். (05)

# விவசாயிகளுக்கு 40 லீற்றர் டீசல் வழங்க நடவடிக்கை

கடந்த வருடம் விளைச்சலின்றி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பெரும்போகத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 17,000 ரூபா பெறுமதியான டீசலை வழங்க விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடல் நிகழ்வின் போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

உரம் கொள்வனவு செய்வதற்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் 15 ஆயிரம் ரூபா நிவாரணத் தொகை மற்றும் ஹெக்டேயர் ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபா இழப்பீட்டுத் தொகைக்கு மேலதிகமாக உரிய நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

அதுமட்டுமல்லாது அடுத்த இரண்டு நாள்களில் ஒவ்வொரு விவசாயிக்கும் தலா 40 லீற்றர் டீசல் வழங்கப்படவுள்ளது. - இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# மக்களை முடக்கும் சட்டங்களை உருவாக்க அரசாங்கம் முயற்சி

## சுமந்திரன் குற்றச்சாட்டு



மக்களாணை இல்லாத அரசு மக்களை முடக்கும்வகையிலான சட்டங்களைஉருவாக்க முயற்சி செய்கின்றது என நாடாமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். இதே வேளை, போராட்டங்கள் ஊடாக அந்த முயற்சிகளை முறியடிப்போம் என்றும் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.


வேண்டாம் வாயை மூடும் சட்டங்கள் என்றமக்கள்கருத்தரங்குஇலங்கை மன் றக் கல்லூரியில் இடம்பெற்றபோதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். (05)

# சீனத் தூதுவர் குழுவினர் காரைநகருக்கு பயணம்

காரைநகர் சாம்பலோடை பிரதேசத்தில் சீனஅரசின்உதவியுடன்அமைக்கப்பட்வுள்ள நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தை இலங்கைக்கான சீனத்தூதுவர் கி ஸென் ஹொங் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இச்சந்திப்பில் உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதேச சபை செயலாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்பின் போது சீன அரசாங்கத்தின் உதவித் திட்டம் தொடர்பில் பொது மக்களுக்கு விளக்கமளித்த தூதுவர் அப்பகுதி மக்களின் தேவைகள் தொடர்பிலும் இதன்போது கேட்டறிந்துகொண்டார். (05)

# நயினாதீவிலும் சீன தூதுவர் குழு



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள சீன தூதுவர் 'கி ஸென் ஹொங்' தலைமையிலான குழுவினர் நேற்று (செவ்வாய்க்கிழமை) நயினாதீவுக்கு சென்றுள்ளனர்.

இதன்போது குறித்த குழுவினரால், நயினாதீவு நாக விகாரையில் தெரிவு செய்யப்பட்ட 500 குடும்பங்களுக்கு சீன அரசின் உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (05)



## கடற்றொழிலாளர்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குமுறையற்ற கடற்றொழில் செயற்பாடுகள் -மற்றும் ஓட்டி என்பதையும் வரைவிலக்கணம் செய்வதற்கு விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

நாம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தில் புதிய திருத்தங்களையும், சேர்க்கைகளையும் மேற்கொண்டு, அதனை ஒட்டுமொத்த கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டமாகக் கொண்டுவர உள்ளோம். அதனை ஒரு வரைபாக தற்போது துறைசார்ந்த உரித்தாளர்களின் கருத்தறிதலுக்காகவும், ஆலோசனைக்களுக்காகவும் கடற்றொழில் சார்ந்த சமூகத்தினரிடையே முன்வைத்து வருகின்றோம்.

இது ஒரு வரைபு என்பதை உணராத அல்லது அறியாத ஒரு சிலர் தற்போதே பலத்த விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இது சுயலாப அரசியல் சார்ந்த விமர்சனங்களே அன்றி வேறொன்றுமில்லை என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த புதிய திருத்தச் சட்ட வரைபு தொடர்பில் காழ்ப்புணர்ச்சி கொண்ட விமர்சனங்களை காற்று வாக்கில் ஊதிக் கொண்டிராமல், உங்களது ஆரோக்கியமான கருத்துக்களை எழுத்து மூலமாக எமக்குக் கையளித்தால் அவற்றையும் நாம் அந்த கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்ட திருத்தத்தில் இணைத்துக் கொள்வதற்கு தயாராக இருக்கின்றோம் என்றார்.

## அஸ்வெசுமவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர்கள் சங்கத்துடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி இணக்கப்பாடு எட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த சந்திப்பு தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் பொது நிருவாக அமைச்சின் அதிகாரிகள் சிலரின் தலைமையில் நடைபெற்றதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அதேபோல், அஸ்வெசும வேலைத்திட்டத்தை சரியான முறையில் முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் ஒவ்வொரு பிரதேசங்களுக்குமான அதிகாரிகளை நியமிப்பதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார்.

அத்தோடு அஸ்வெசும நலன்புரி வேலைத்திட்டத்தில் காணப்படும் தொழில்நுட்ப ரீதியான சிக்கல்களை நிவர்த்தித்து முன்னோக்கி கொண்டுச் செல்வதற்கான இயலுமை காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

2002 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்துக்கமைய 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 ஆம் திகதி 2302/23 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் ஊடாக வெளியிடப்பட்ட, அமைச்சரவை அனுமதியுடனான ,நலன்புரி கொடுப்பனவுகளை பகிர்ந்தளிக்கும் கட்டளைகளை திருத்தம் செய்து அமுல்படுத்தப்பட்ட 2022 டிசம்பர் 15 ஆம் திகதி 2310/30 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அஸ்வெசும நலன்புரி நன்மைகள் வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படக் கூடிய, வறுமையான மற்றும் மிக வறுமையான குடும்பங்கள் என்ற 04 கட்டங்களின் கீழ் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு வழங்கப்படுவதோடு, அங்கவீனமான, முதியவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கும் வழமை போன்ற கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளது.

## ஊழல் கிரிக்கெட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிரிக்கெட்டின் அடிமட்டமான பாடசாலைகள், சங்கங்கள், மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களின் வசதி வாய்ப்புகளுக்காக கிரிக்கெட்டிற்குச் சொந்தமான பெரும் தொகையான நிதி முதலீடு செய்யப்படவேண்டும் என்றும், இதற்காக, முதல் வரிசை அணி போலவே இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது வரிசை அணிகள் நிறுவப்பட்டு, கிராமத்திலும் நகரத்திலும் திறமையான வீரர்கள் கூட எந்தவித பாகுபாடும் இன்றி உயர் நிலைக்குச் செல்லும் வகையில் கிரிகெட் தெரிவு முறைமை ஏற்படுத்தப்படவேண்டும்.

குரோனிச கட்டமைப்பில் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் விளையாட்டு வீரர்கள் உயர் நிலைக்கு சென்ற காலங்கள் இல்லாதொழிக்கப்பட்டு, ஊழல் நடைமுறைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்றும், உத்தியோகபூர்வ பதவி நிலை தெரிவுகளுக்கான வாக்கெடுப்புகள் பன்முகத் தன்மையுடன் வெளிப்படத் தன்மையுடனும், பொறுப்புடனும் நடத்தப்பட வேண்டும் என்றும், ஊழல் நிர்வாகத்திற்கு மாற்றாக பல்வேறு தரப்புகளின் கைக்கூலிகளாக இருப்பவர்கள் அன்றி விளையாட்டுத்துறையில் புரிதல் உள்ளவர்கள் பதவிகளுக்கு வரவேண்டும்.

ஊழல் நிறைந்த காலத்தை முடிவுக்குக் கொண்டுவந்து சரியான பாதையில் செல்ல, பல்வேறு குழுக்களில் நியமிக்கப்படும் நபர்களின் தகுதி மற்றும் விளையாட்டுத் துறை சார் அறிவு குறித்து கேள்விக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும், இதற்கு பழைய வீரர்கள், நேர்மையானவர்கள் மற்றும் திறமையான நிர்வாகிகளின் ஒன்றிப்பிலான புதிய வேலைத்திட்டம் தேவை என்றும், மாற்றம் சரியானதாக இருக்க வேண்டும்.

இலங்கை கிரிக்கெட் சபையில் இடம்பெறும் மாற்றங்கள் குறித்து ஜனாதிபதிக்கு தெரியாது என தெரிவிக்கப்படுவதாகவும், இதன் மூலம் இரு தரப்பினரிடையேயான இழுபறி நிலை நிறுத்தப்பட வேண்டும் என்றும், இது அரசியல் இழுபறி இல்லாமல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், சகல அனைத்து விளையாட்டுகளில் இருந்தும் அரசியலை அகற்ற வேண்டும்.

கிரிக்கெட் விளையாட்டை வைத்து நடக்கும் அரசியல் சூதாட்டங்களை மேற்கொள்ள வேண்டாம் என்றும், இரகசிய கூட்டு சதிகள் நிறுத்தப்பட்டு, சகல அரசியல் தரப்புகளும் ஒன்று சேர்ந்து இலங்கை கிரிக்கெட்டை மீண்டும் சரியான பாதைக்கு இட்டுச் செல்ல ஒன்றிணையுமாறும், தற்சமயத்திலும் அரசியல் சூதாட்டத்தில் ஈடுபட வேண்டாம் என்றும் ஜனாதிபதி தலைமையிலான அரசிடம் கோரிக்கை விடுக்கின்றேன் என்றார்.

## அரச, தனியார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமான வரி குறைக்கப்பட்டது. அதேபோன்று, தொடர்ந்தும் அதிகளவில் காணப்பட்ட வரித் தொகைகளை நீக்கி, வரிச்சலுகைகள் வழங்கப்பட்டன. இந்த வரிச் சலுகைகள் காரணமாக இந்த நாடு வேகமாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. இறுதியாக 2022 ஆம் ஆண்டாகும்போது மத்திய வங்கி பணத்தை அச்சிட்டு சம்பளம் வழங்கும் நிலை தோன்றியது.

அந்த நிலையுடன், நாம் ஒரு விடயத்தை நினைவில் கொள்ள வேண்டும். எப்போதும் ஓர் அரசு வீழ்ச்சி அடைவது அந்நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போதுதான். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எப்போதும், இவ்வாறு வீழ்ச்சி அடைந்த நாட்டைப் பொறுப்பேற்று அதனை மீட்டெடுத்துள்ளார். உதாரணமாக 2015 ஆம் ஆண்டு பத்தாயிரம் ரூபாவால் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டாலும் கூட அது அரச ஊழியர்களின் சம்பள சுற்றறிக்கையின் பிரகாரம், இலங்கை வரலாற்றில் முதன் முறையாக அவர்களின் வருமானத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தினார்.

நாடு வங்குரோத்து அடைந்த போது எரிவாயு லொறிகள் மற்றும் எரிபொருள் பௌஸர்களைக் கண்டவுடன் மக்கள் கைதட்டி ஆரவாரம் அளிக்கும் நிலை தோன்றியது. அரச அலுவலகங்களில் மின்சாரம் இன்றி அரச பொறிமுறை ஸ்தம்பித்தது. இப்போது அனைத்தும் கிடைக்கின்றன. ஆனால் விலை அதிகரித்துள்ளது. அதன் விலைகளைக் குறைக்க வேண்டியுள்ளது. எந்தவித சந்தேகமும் கொள்ள வேண்டாம். நான் அறிந்த இந்நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இறுதியில் எரிவாயு விலையையும் குறைப்பார். மின்சார விலையையும் குறைப்பார். தற்போதுள்ள பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். சம்பளத்தையும் அதிகரிப்பார்.

இவ்வாறு ஒரு முறைமையை நடைமுறைப்படுத்தும்போது, அரச தொழிற்சங்கங்கள் பழைய பழக்கத்தின்படி வேலைநிறுத்தம் செய்தால்தான், ஏதாவது இலாபம் கிடைக்கும் என்று நினைத்தால், அது தமக்கு கிடைக்கப்போகும் வருமானவழியை இல்லாமலாக்கும் நடவடிக்கை ஆகும். உதாரணமாக அரச ஊழியர்களுக்கான சம்பளம் வழங்கப்படுவது, நாட்டில் உள்ள ஏனைய பொதுமக்களின் வரி வருமானம் உட்பட சுற்றுலா பயணிகளினால் கிடைக்கும் அந்நியச் செலாவணி போன்ற வருமானம் ஈட்டும் விடயங்களினாலாகும். இதுபோன்ற வேலைநிறுத்தங்கள் இந்த வருமான வழிகளைப் பாதிக்கின்றன.

வேலைநிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் போது சர்வதேச ஊடகங்கள் அதனை ஒளிபரப்புகின்றன. அதன் காரணமாக இலங்கை ஸ்திரமாக நிலையில் இல்லை என்று நினைத்து, சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தரப் பயப்படுவார்கள். பொருளாதார மீட்சிக்காக தற்போது முன்னெடுக்கப்படும் பணிகளை வெற்றியடைச் செய்ய ஜனாதிபதி எதிர்பார்க்கின்றார். சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட, நாம் கடன் பெற்றுள்ள நாடுகளின் கடன்களை மீளச்செலுத்த அவசியமான பொறிமுறைகளை உருவாக்கிக்கொண்டும், சில நாடுகளின் கடன்களை மீளச் செலுத்திக் கொண்டிருக்கும் நேரத்திலும் இவ்வாறான பழைய நடவடிக்கைகளின் மூலம் நாடு வீழ்ச்சியடையும். மீண்டும் வங்குரோத்து நிலைக்குச் செல்லும். இந்த உண்மையை அறிந்தே அனைவரும் செயற்பட வேண்டும்.

அரசதுறையினரின் சம்பளத்தை அதிகரிப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். தனியார் துறையினரின் வருமானத்தை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுப்படும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளை பலப்படுத்த வேண்டும். வாகனங்களைத் தவிர ஏனைய அனைத்துப் பொருட்களையும் இறக்குமதி செய்ய தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நாம் இருந்த நிலை பற்றிய நினைவு இன்றி, இந்தப் பணிகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அது ஒரு துரதிஷ்டவசமான நிலையாகும்.

பலவீனமான இடங்களை ஸ்திரப்படுத்தவே நாம் புதிய சட்ட விதிகளை அறிமுகப்படுத்துகின்றோம். திருடர் திருடர் என்று கூறி பலனில்லை. திருடர்களை பிடிப்பதற்கான ஆசியாவின் வலுவான சட்டத்தை நாம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளோம். அவற்றை நாம் சட்டப்படி அமுல்படுத்த வேண்யுள்ளது. அரசியலமைப்பின் பிரகாரமே நாம் நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அதன்படி செயற்பட்டே நாம் இந்தப் பிரச்சினைகளை, இந்த அளவுக்குத் தீர்த்துள்ளோம்.

ஜனாதிபதி தேசிய சபையை நியமித்துள்ளார். அந்த இடத்தில் தேசிய பிரச்சினைகளை முன்வைக்கும் திறன் அனைவருக்கும் உண்டு. பழைய முறைகளில் அரசியல் செய்ய முடியாது என்பதை அனைத்து அரசியல் கட்சிகளும் நினைவில் கொள்ள வேண்டும். இப்போது வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தையும் ஸ்தாபித்துள்ளோம். இலங்கையில் உள்ள எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது சிவில் சமூகமோ தற்போது முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்கு மேலதிகமாக வேறு ஏதேனும் வழிமுறைகள் இருந்தால் அந்த விடயங்களை அந்த அலுவலகத்தில் முன்வைக்க முடியும். ஒவ்வொரு துறையையும் வலுப்படுத்த புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

எனவே முழு அரச பொறிமுறையின் அனைவரும் மிகவும் அவதானமாக, எதிர்காலத்தில் பெரும் மாற்றத்தை வேண்டியுள்ள அரச பொறிமுறையை பலப்படுத்தி முன்னோக்கிச் செல்ல வேண்டியுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருக்கும் பிரகாரம் முழுமையான அரச ஊழியர்களைப் பாதுகாக்க தற்போதைய ஆட்சி நடவடிக்கை எடுக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.' என்றார்.

## நுவரெலிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பபட்டபோது பதிலளிகைக் கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நுவரெலியாவிலுள்ள குறித்த அஞ்சல் நிலையம் பராமரிக்க முடியாத நிலையில் உள்ளது. நாடு தற்போதைய பொருளாதார நிலைமைகளுடன் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதென்பது முடியாத காரியமாகும்.

இலங்கையின் முன்னணி சுற்றுலா விடுதிகளில் ஒன்றான தாஜ் சமுத்திராவினால், சுற்றுலா விடுதியொன்றை நிர்மாணிப்பதற்காக குறித்த அஞ்சல் நிலைய கட்டடம் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க யோசனையொன்றை முன்வைத்துள்ளார், விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நானும் இந்த யோசனையை வரவேற்கின்றேன்.

அத்துடன், நுவரெலியா பகுதியில் இத்தகைய சுற்றுலா விடுதியொன்று நிர்மாணிக்கப்படுவதால், அந்த பகுதியில் மக்களுக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகுவதுடன், இதனூடாக பலரினது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் முடியும்.

உலகின் முதலாவது பிரதமர் வசித்துவந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வீடும் தற்போது, சுற்றுலா விடுதியாக இயங்கி வருகின்றமையையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது என்றார்.

## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை என்பதாலும், அதற்கமைய, இந்த சட்டமூலம் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள 10 மனுக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதை முடிவுக்குக் கொண்டுவர தீர்மானித்துள்ளது என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# நுவரெலியா தபால் நிலைய கட்டடத்தை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்குவதை எதித்துப் போராட்டம்

நுவரெலியா தபால் நிலைய கட்டடத்தை புதிய முதலீட்டுக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு பொறுப்பாக்க கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கண்டி மற்றும் நுவரெலியாவில் உள்ள தபால் அலுவலகங்களை விற்பனை செய்யும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் 48 மணிநேர அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட தபால் ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்நிலையில், இன்றும் நாளையும் , 9 ஆம் திகதியும், 10 ஆம் திகதியும் தபால் சேவையின் சகல சேவையாளர்களின் விடுமுறைகளும் இரத்துச் செய்யபட்டுள்ளதாகவும் சகலரும் சேவைக்குசமுகளிக்கவேண்டுமெனவும் தபால்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நுவரெலியாவில் உள்ள தபால் அலுவலகத்தை விற்பனை செய்யும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு செவ்வாய்க்கிழமை வெளிநாட்டுசுற்றுலாபயணிகளும் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# காணித் தகராறில் துப்பாக்கி சூடு அம்பாறையில் ஒருவர் உயிரிழப்பு

அம்பாறையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளார்.

அம்பாறை, பண்டாரதூவ, மயாதுன்ன பிரதேசத்தில் திங்கட்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியின் ஊடாகவே இந்த பிரயோகம்மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் 42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே உயிரிழந்துள்ளார்.

இவர், தனது வீட்டின் பின்புறம் குளித்துக் கொண்டிருந்த போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


வயற்காணி தொடர்பாக ஏற்பட்ட தகராறே துப்பாக்கி பிரயோகத்திற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மரணம் தொடர்பாக நீதிவான் விசாரணையைத் தொடர்ந்து பிரேத பரிசோதனைமேற்கொள்ளப்படவுள்ளது.

சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவரை கைது செய்ய உகன, பண்டாரதுவ பொலிஸார் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (05)

# ஹோட்டலில் உட்கார்ந்து இருந்து கொண்டு தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது

## வரதராஜப் பெருமாள் இடித்துரைப்பு



தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இந்தியாவுடனான தங்கள் ஈடுபாட்டை வலுப்படுத்த வேண்டும் என வடக்கு கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூரில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்று உரையாற்றிய அவர், இந்த விடயத்தில் தமிழ் கட்சிகள் மற்றும் அவற்றின் தலைவர்களிடம் இருந்து அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

1983-87 காலப்பகுதியில் தமிழ் கட்சிகளும் அதன் தலைவர்களும் புதுடில்லி மற்றும் தமிழ்நாட்டிலுள்ள இந்தியத் தலைவர்களுடன் அடிக்கடி தொடர்பு இருந்ததை போன்று தற்போது அவ்வாறான உறவு இல்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் உட்கார்ந்து கொண்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதுவது மட்டும் பலன் தராது என்றும் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் தீர்விற்காக இந்தியாவிற்குள் குரல் இருக்க வேண்டும் என்றும் புதுடில்லி மற்றும் தமிழ்நாட்டுத் தலைவர்களுடன் தமிழ்த் தலைவர்கள் நெருங்கிய உறவைப் பேணினால் மட்டுமே இது சாத்தியமாகும் என்றும் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் தமிழகத்தில் வாழும் இலங்கை அகதிகளுக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் தொடர்பாக மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் வரதராஜப் பெருமாள் கூறியுள்ளார். (05)

# சக்திவாய்ந்த அரசியல் கட்சியில் சந்திரிகா இணைந்துகொள்வார்

## விஜேபால ஹெட்டியாராச்சி தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க எதிர்வரும் காலங்களில் மிக முக்கிய அரசியல் கட்சியுடன் இணையவுள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான ஒருங்கிணைப்பாளர் விஜேபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், முன்னாள் ஜனாதிபதி நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப ஆதரவை வழங்கினால், ஐக்கிய மக்கள் சக்தியும் அந்த முயற்சிகளுக்கு தனது ஆதரவை வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மீண்டும் அரசியலுக்கு வருவதை தமது கட்சி வரவேற்பதாகவும் எவ்வாறாயினும் அவர் மைத்திரிபால சிறிசேனவுடனோ அல்லது ராஜபக்சக்களுடனோ இணைந்து அரசியலில் ஈடுபடுவார் என்ற நம்பிக்கை தமக்கு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் தற்போதைய ஜனாதிபதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் தைரியம் பொதுஜன பெரமுனவிற்கு இல்லாத நிலையில் நாமல் ராஜபக்ஷ கூறிய கருத்து ஒரு நாடகம் என்றும் விஜேபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

வரவிருக்கும் வரவு செலவுத் திட்டம் மக்களின் கஷ்டங்களை தீர்க்க வேண்டும் என்றும் நாட்டின் உழைக்கும்சமுதாயத்திற்குஅரசாங்கம் ஓரளவுநிவாரணம்வழங்கவேண்டும் என்றும் விஜேபால ஹெட்டியாராச்சி கேட்டுக்கொண்டுள்ளார். (05)

# நாட்டில் தானிய இறக்குமதிக்கு அமைச்சரவையிடம் கோரிக்கை

உளுந்து,கௌப்பி மற்றும் பயறு போன்ற தானியங்களை இறக்குமதி செய்வது குறித்து உணவு பாதுகாப்பு குழுவிடம் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த தானியங்களை மீள இறக்குமதிசெய்யஅமைச்சரவையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதால் உளுந்து, கௌப்பி மற்றும் பயறு போன்ற தானியங்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டதாகவும் தற்போது மக்களின் நுகர்வு அதிகரித்துள்ளதால் இறக்குமதி செய்ய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய தட்டுப்பாடு காரணமாக குறித்த தானியங்களின் விலை அதிகரித்து காணப்படுவதாகவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (05)

# 10,000 பண்ணை தொழிலாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்புவதற்கு முடிவு

இஸ்ரேலின் விவசாயத்துறை போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 10,000 பண்ணைத் தொழிலாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்ப இலங்கை அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்தஉடன்படிக்கையில் இஸ்ரேலின் உட்துறை அமைச்சர் மோசே ஆர்பெல் மற்றும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டாரநாயக்க ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

கடந்த வாரம் இஸ்ரேலிய நிறுவனங்கள் விவசாயத் துறைக்காக 5,000 தொழிலாளர்களை நாட்டிற்கு அழைத்து வருவதற்குஅமைச்சரவைஅனுமதி அளித்ததைத் தொடர்ந்து இப்புதிய ஒப்பந்தம்கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கையைச் சேர்ந்த 4,500 தொழிலாளர்கள் இஸ்ரேலில் பணிபுரிகின்றனர், அவர்களில் பெரும்பாலானோர் வீட்டு பராமரிப்புத் துறையில் பணிபுரிகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# சமிக்ஞை கட்மைப்பு செயலிழந்தது தொடருந்து சேவைகள் தாமதம்

மழையுடனான காலநிலை காரணமாகரயில்பாதைசமிக்ஞை சேவை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால்அனைத்துசேவைகளும் தாமதமடைந்துள்ளன எனவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மருதானை மற்றும் பேஸ்லைன் ரயில் நிலையங்களுக்கு இடையிலான ரயில் பாதையில் மரமொன்று வீழ்ந்துள்ளமையால்களனிவெளி ரயில்பாதையின்போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. (05)

# கடும் மழையால் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடியுடன் கூடிய மழை தொடர்ந்து பெய்யக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் ஊவா ஆகிய நான்கு மாகாணங்களின் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டம் காணப்படும். குறித்த பகுதிகளில் 75 மில்லமீற்றரிலும் கூடிய ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும். அத்துடன், வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் காலை வேளையில் மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன்கூடியமழையின்போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல்தாக்கங்களினால்ஏற்படும் பாதிப்புகளை குறைத்துக்கொள்ள போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பொதுமக்கள் பின்பற்ற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடும் மழை காரணமாக பம்பலபிட்டி - டுப்ளிகேஷன் வீதி, பொரளை சுற்றுவட்டம் ஆகிய பகுதிகளில் மரம் முறிந்து வீழ்ந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அத்துடன் தெமட்டகொடை காவல்துறை நிலையத்திற்கு அருகிலும் மரம் ஒன்றுமுறிந்துவீழ்ந்துள்ளது. இதன் காரணமாக குறித்த பகுதிகளை அண்மித்த வீதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் கோட்டை, புறக்கோட்டை, ஆமர்வீமதி, உள்ளிட்ட பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன. இதன் காரணமாக அந்த பகுதிகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மருதானை தொடருந்து நிலையத்தின் சமிக்ஞை கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அனைத்து மார்க்கங்களுடனான தொடருந்து சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தொடர்ந்து கட்டுப்பாட்டு மையம் இதனைத் தெரிவித்துள்ளது.

அத்துடன் மருதானை மற்றும் பேஸ்லைன் தொடருந்து நிலையங்களுக்கு இடையே மரம் ஒன்றுமுறிந்துவீழ்ந்துள்ளது. இதன் காரணமாககளனிவெளிதொடருந்து மார்க்கத்துடனானபோக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதேநேரம், வரகாபொல - உடுகும்புர பகுதியில் பாரிய மரம் ஒன்று முறிந்து வீழ்ந்துள்ளதன் காரணமாக கொழும்பு - கண்டி பிரதான வீதியூடான போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஹல்துமுல்ல - பத்கொட பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ள தன் காரணமாக கொழும்பு - பதுளை பிரதான வீதியூடான போக்குவரத்து பத்கொட பகுதியில் தடைப்பட்டுள்ளது.

மேலும், தொடரும் சீரற்ற வானிலை காரணமாக, நாட்டின் பல நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் தொடர்ந்தும்திறந்துவிடப்பட்டுள்ளன. தெதுரு ஓயா, ராஜாங்கணை, அங்கமுவ, உடவளவை, தப்போவ உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் வான்கதவுகளேதொடர்ந்தும் திறந்துவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, நீர்த்தேக்கங்களின் அருகில் மற்றும் அதன் தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ள அபாயம் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக நீர்பாசன திணைக்களத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவின்பணிப்பாளர்எஸ்.பீ.சி சுகீஸ்வர தெரிவித்துள்ளார்.

# 52 கிலோ கிராம் கஞ்சாவுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது!

கிளிநொச்சி கனகாம்பிகை குளம் பகுதியில் சுமார் 52 கிலோ கிராம் கஞ்சா பொதிகளை வீட்டில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் 44 வய தான நபரொருவரை திங்கட்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில்இதுகுறித்தமேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# தபால் சேவையாளர்களின் சகல விடுமுறைகள் இரத்து

தபால் சேவையின் சகல சேவையாளர்களின்விடுமுறைகளும்இரத்துச் செய்யப் பட்டுள்ளதாக தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இன்றும், நாளையும், நாளை மறுதினமும் இவ்வாறு தபால் சேவையின்சகலசேவையாளர்களின் விடுமுறைகளும் இரத்துச் செய்யபட்டுள்ளதாகவும்சகலரும்சேவைக்கு சமுகளிக்கவேண்டுமெனவும்தபால்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

கண்டி மற்றும் நுவரெலியாவில் உள்ள தபால் அலுவலக கட்டடங்களை விற்பனை செய்யும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து செவ் வாய்க்கிழமை நள்ளிரவு முதல் 48 மணிநேர அடையாளவேலைநிறுத்தத்தில்ஈடுபட தபால் ஊழியர்கள் தீர்மானித்திருந்த நிலையிலேயே இந்த அறிவிப்பை தபால்மா அதிபர் விடுத் துள்ளமை குறிப்பிடத் தக்கது. (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர் பிரதேசங்களை சீனாவிடமிருந்து பாதுகாக்குமாறு கோரிப் போராட்டம்

வடக்கு, கிழக்கு பிராந்தியத்தில் அமெரிக்கா தலையிட்டு தமிழர் பிரதேசங்களை சீனாவின் அத்துமீறலில் இருந்து பாதுகாக்க வேண்டும்எனவலியுறுத்திகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் நேற்று (செவ்வாய்க்கிழமை) வவுனியாவில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான சீன தூதுவர் கி சென் ஹொங் தலைமையிலான குழுவினர் இரண்டாம் நாளாக நேற்று நயினாதீவுக்கு விஜயம் செய்திருந்தனர்.

இதன்போது நயினாதீவு நாக விகாரையில் நடந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 500 குடும்பங்களுக்கு உலர் உணவுபொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கை மற்றும் சீனா பௌத்த நட்புறவு சங்கமும், சீனாவின் புத்த சங்கம் இணைந்து சீனாவில் உள்ள பௌத்த மக்களால் இலங்கையிலுள்ள வறிய மக்களுக்காக உலர் உணவுப் பொதிகளை வழங்கியிருந்தனர்.

இதேவேளை வவுனியாவில் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது சங்கத்தினரால் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் 2450 ஆவது நாளாக சுழற்சிமுறை போராட்டத்தை முன்னெடுக்கப்படும் பிரதான தபாலகத்திற்கு அருகில் உள்ள கொட்டகைக்கு முன்னால் குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு பிராந்தியத்தில் அமெரிக்கா தலையிட்டு தமிழர் பிரதேசங்களை சீனாவின் அத்துமீறலில் இருந்து பாதுகாக்க வேண்டும் என்றும் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் தாயம் ாக்ளாகியநாம்எமதுதமிழர்தாயகத்தில் உள்ள காணிகளிலும் மீன்பிடி நீரிடத்திலும் சீனாவின் அத்துமீறலை வன்மையாக எதிர்க்கிறோம் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது வலியுறுத்தியுள்ளனர். (05)



# கைத்தொழில் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ள ஈரானுக்கு பிரதமர் அழைப்பு

எரிசக்தித் துறைக்கு மேலதிகமாக விவசாயம் மற்றும் கைத்தொழில் துறையிலும் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு ஈரானுக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன அழைப்பு விடுத்தார்.

ஈரானின் புதிய தூதுவர் அலிரேசா டெல்கோஷ் அலரிமாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க மற்றும் ஈரான் தூதரகத்தின் பொருளாதார மற்றும் தூதரகப் பிரிவின் பிரதானி கே சொஹைல் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



அதேநேரம், இஸ்ரேலின் உள்துறை அமைச்சர் மோசே ஆர்பெல் மற்றும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார ஆகியோர் உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திட்டுள்ளனர்.

இதன் மூலம் 10,000 இலங்கையர்களை பண்ணை தொழிலாளர்களாக உடனடியாக வேலைக்கு அமர்த்த இஸ்ரேலுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் விவசாயத் துறை போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் 7 முதல், விவசாயத் துறையில் 30,000 வெளிநாட்டுத் தொழிலாளர்களில் சுமார் 8,000 வெளிநாட்டு விவசாயத் தொழிலாளர்கள் இஸ்ரேலை விட்டு வெளியேறியுள்ளனர்.

ஒக்ரோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் தாக்குதலின் போது, அதிகளவான வெளிநாட்டு தொழிலாளர்கள் கொல்லப்பட்டதோடு, பலர் காஸாவில் பணயக்கைதிகளாகவும் பிடிக்கப்பட்டனர்.

அதே நேரம், சுமார் 20,000 பாலஸ்தீனிய விவசாய தொழிலாளர்கள் நாட்டிற்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைய முதல் இலங்கை விவசாயத் தொழிலாளர்கள் எதிர்வரும் வாரங்களில் வரவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கையைச் சேர்ந்த 4,500 தொழிலாளர்கள் இஸ்ரேலில் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்க முடிவு

பெரும் அம்பாந்தோட்டை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் காணிகள் கைக்கொள்ளல் மற்றும் கையகப்படுத்தல் காரணமாக வீடுகளை இழந்த குடும்பங்களுக்கான மாற்றுக் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

பாரிய அம்பாந்தோட்டை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் காணிகள் கைக்கொள்ளல் மற்றும் கையகப்படுத்தல் காரணமாக 97 குடும்பங்களுக்கு வீடுகள் இழக்கப்பட்டுள்ளமையால் அவர்களுக்கான மாற்றுக்காணிகளை வழங்க வேண்டியுள்ளது.

அதற்காக அம்பாந்தோட்டை சிரிபோபுர பிரதேசத்தில் அமைந்துள்ள 10.11 ஹெக்டேயர் அரசுக்குச் சொந்தமான காணியொன்று அடையாளங் காணப்பட்டுள்ளது.

குறித்த காணியில் வீட்டு வசதிகளுக்கான 126 காணித்துண்டுகள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன், தற்போது வீடுகளை இழந்த 97 குடும்பங்களில் 84 குடும்பங்களுக்கு காணித்துண்டுகள் ஒதுக்கி வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனையைக் கருத்தில் கொண்டு, பாரிய அம்பாந்தோட்டை அபிவிருத்தி காரணமாக வீடுகளை இழந்த குடும்பங்களுக்காக அம்பாந்தோட்டை சிரிபோபுரவில் அமைந்துள்ள 10.11 ஹெக்டேயர் அரச காணியில் காணித்துண்டை ஒதுக்கி வழங்குவதற்கும், நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. - இவ்வாறு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (05)

# கிரிக்கெட்டில் நடந்த ஊழல் மோசடிகளை வெளிப்படுத்தவே நான் குழு அமைத்தேன்

## அமைச்சர் ரொஷான் ரணசிங்க கூறுகிறார்

கிரிக்கெட் நிர்வாக சபையில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை வெளிக்கொண்டு வருவதற்காகவே புதிய குழு அமைக்கப்பட்டதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாம் கிரிக்கெட் நிர்வாக சபையை இடைநிறுத்தி, புதிய குழுவொன்றை சிறிது காலத்துக்கு நியமித்திருந்தோம்.

தற்போது இந்தக் குழுவுக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற 20-20 போட்டித் தொடரில் நேர்ந்த, ஊழல் மோசடிகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கணக்காய்வாளரால் குறிப்பிடப்பட்டமைக்கு இணங்கவே, நாம் இந்தக் குழுவை நியமித்திருந்தோம்.

இன்று இந்தக் குழுவுக்கே தற்போது நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இதன்ஊடாக, மீண்டும் ஊழல் வாதிகள் இன்று முதல் பணியில் இணைந்துக் கொள்வார்கள்.

இந்நாட்டு மக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும், கிரிக்கெட் நிர்வாகக் குழுவை மாற்ற வேண்டும் எனக் கோரியமைக்கு இணங்கத்தான் நான், இந்த மாற்றங்களைச் செய்திருந்தேன். இந்த நிலையில், நான் கிரிக்கெட் சபையில் இடம்பெற்ற அனைத்து ஊழல் - மோசடிகள் தொடர்பாகவும் விசேட உரையாற்றவுள்ளேன். - என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)



# பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தும் சிகிச்சை விடுதி

சீன அரசின் நிதியுதவியில் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதி அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையிலான குழுவினர் நிர்மாணப்பணிக்கள் இடம்பெறும் பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர், பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் எம்.ஐ.எம். றஹீம் மற்றும் பொறியியலாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.11.2023இல் வெளியிடப்பெற்றது.